திருநெல்வேலி

# தலங்காவற் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர்




தப. 9372

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்.
கசெட் இல. 14805
7. 6. 1968

255.22
தலங்
SLIPR


ஜூன் - ஜூலை 1988

# திருநெல்வேலி

## தலங்காவற் பிள்ளையார் கோவில்

# கும்பாபிஷேக மலர்

தொகுத்து வெளியிட்டவர்

எஸ். திருச்செல்வம்

சம்புரோஷண மகாகும்பாபிஷேகம்

17-06-1988

மண்டலாபிஷேக பூர்த்தி, (1008) சங்காபிஷேகம்

03-08-1988

# திருநெல்வேலி
# தலங்காவற் பிள்ளையார் கோவில்
# எழுந்தருளி மூர்த்தி



உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களின்

# அருளுரை

சைவ அருட் பெருந்தகையீர்,

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாத விநாயகப்பெருமானுக்கு நாம் எடுக்கும் விழாக்கள், கைங்கரியங்கள் எத்துணை மேன்மையும் சிறப்பும் உடைத்து என்பதனை விளக்கற்கரிது. பிரணவ சொரூபியான வேதமுதல்வரை நாமும் எல்லாச் சடங்குகளிலும் முதற்கண் வணங்கி வழிபட்டு மற்றக் காரியங்களைத் தொடங்குகிறோம்.

மற்றைய மூர்த்திகளைப்போலல்லாது எல்லா இடங்களிலும் எளிமைப்பொலிவோடு வீற்றிருந்து எமது பிழைகளையெல்லாம் பொறுத்தருளி, விக்கினங்களை வேரறுக்கும் கருணாமூர்த்தியவர்.

இப்பெருவிழாவினையொட்டி ஒரு சிறப்பு மலரினை முரசொலி பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள், மற்றும் அன்பர்களது துணையோடு வெளியிடுவது சாலப் பொருத்தமாகும். மேலும் இவ்விழா சிறப்புற நிறைவு செய்யும் பெருநோக்கோடு அயராது தொண்டுகள் புரிந்த அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம். யாதானுமொரு குறைவின்றி இக்குடமுழுக்கு விழா செவ்வனே நிறைவுற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவடிகளைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிகள்

உ

சிவமயம்

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

தலைவர்

## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

யாழ் குடாநாட்டில் விளங்குகின்ற விநாயகராலயங்களில் மிகப் பிரசித்தி வாய்ந்த்து தலங்காவற் பிள்ளையார் கோயிலாகும். திருநெல்வேலியமைந்த இக் கோயில் வழிபாடு வரலாற்றுச் சிறப்புடன் கூடியது. இதனை உணர்ந்த அவ்வூர்ப் பெருமக்கள் திருப்பணிகளினால் புதுப் பொலிவூட்டி மகா கும்பாபிஷேக விழாவெடுத்து மகிழ்ந்தமை பாராட்டுக்குரியது. இக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவினால் உலகமும் குளிர, உள்ளமும் குளிர, வாழ்வுங்குளிர, வளமும் பெருக வழி ஏற்படுகிறது.

''முகத்தாற் கரியனென்றாலும் தனை முயன்றவர்க்கு மிகத்தான் வெளியனென்றே மெய்ம்மை உன்னும் விரும்படியார்'' என்று பாடுகிறார் நம்பியாண்டார். காட்சிக்கெளியனாயும் கருத்திற்கினியனாகவும் விளங்கும் எம்பெருமானுக்கு நடைபெறவிருக்கும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் வெளியிடப்படும் ஞான மலரானது சைவ உலகுக்கு ஒரு நன் மலராக அமைய இருப்பது வரவேற்கத்தக்கது.

உருகும் அடியார் உள்ளூற உள்ளே ஊறும் தேனாகவும் கருணை மழை பொழியும் கார்மேகமாகவும் விநாயகன் விளங்குகின்றான். அவனை முன்வைத்து அனைத்தையும் மேற்கொள்வோம். ஆகவேண்டியதை நிறைவேற்றித் தருவான் என்ற நம்பிக்கை அனைவரது உள்ளத்திலும் நிலைக்கட்டும். இப் புண்ணிய முயற்சியில் ஈடுபாடு கொண்ட அனைவரையும் வணங்கி வாழ்த்தி அமைகிறேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

# காலந்தோறும் விநாயகர் வழிபாடு

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

இந்து சமயத்தில் விநாயக வழிபாடு முதன்மை பெற்று விளங்குகிறது. இந்து சமயம் பரவியுள்ள இடங்களிலும் இவ்வழிபாடு சிறப்படைந்துள்ளது. ஸ்ரீ சங்கரர் நிறுவிய ஷண்மதங்களுள், காணுபத்தியம் ஒரு நெறியாக அமையினும், விநாயகரைத் தலைமைத் தெய்வமாகக் கொண்டு நிகழும் வழிபாடு, கோயில்களிலும், இல்லங்களிலும் காலங்காலமாக முதன்மை பெற்று வருகிறது. கணபதிக்குரிய வழிபாடு சாதாரணமாக, ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும், புனிதமான மரங்களுக்கடியிலும், சந்திகளிலும் இடம்பெறுவதைக் கொண்டு, இவ்வழிபாடு எங்கணும் பரவிய தன்மையை நாம் உணர முடிகிறது. நமது நாளாந்த வாழ்க்கையில், எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், இன்னல் இடையூறின்றி நிறைவு பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையாகக் கொண்டே இந்துக்கள் இத் தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். விநாயகருக்குரிய திருநாமங்களில் பல இதனையே உட்பொருளாகக் கொண்டு விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத் தகைய சிறப்பு மிக்க விநாயக வழிபாட்டின் ஐதிகங்களையும், வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவற்றையும் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இருக்கு வேதத்தில் இத் தெய்வம் பற்றிய குறிப்புக் காணப்படுவதைக் கொண்டு இவ் வழிபாட்டின் தொன்மை வேதகாலத்துக்குரியது எனக் கூறுவர். வேத காலத் தெய்வங்களாகிய இந்திரன், பிருகஸ்பதி, உருத்திரன், மருத்துகள் பற்றிய வருணனை களில் கணபதியின் மூலம் இருப்பதாகச் சிலர் கருதுவர். விநாயகரின் திருவவதாரம் பற்றி மகாபுராணங்களாகிய சிவபுராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்தபுராணம் முதலியவற்றில் உள்ளன. புராணங்களின்படி விநாயகர் சிவனது தெய்விகக் குடும்பத் தில், மூத்த புதல்வராகவும், பிள்ளையாராகவும், கந்தனுக்கு மூத்தவராகவும் விளங்கு கின்றார். சில கதைகளின்படி, இவர் சிவனுக்கோ அல்லது பார்வதிக்கோ மட்டும் மகனாகப் பிறந்ததாயும், வேறு சில இவ் இருவருக்கும் இவர் மகனாய்ப் பிறந்ததாகவும் கூறுகின்றன. சிவனது நெற்றியிலிருந்து இவர் பிறந்ததாக வராகபுராணம் கூறும். சுப்ரபேதாகமத்தில் சிவனும் பார்வதியும் இரு யானைகளாய் உருமாறியிருந்தபோது, விநாயகர் தோன்றினார் எனக் காணப்படுகிறது. சிவபுராணம் பல படைப்புக் காலங் களில் பல்வேறு வகையாக விநாயகர் தோன்றினார் எனக் குறிப்பிடுகின்றது. விண்ண வரும், மண்ணவரும் விநாயகரைப் போற்றி வழிபட்டு நலம் பல பெற்ற வரலாறுகள்

உண்டு. விநாயகரின் வழிபாட்டுச் சிறப்பு இவ்வகையில் விண்ணகத்தோடும் தொடர்புடையது. இத்தகைய விண்ணகத்துத் தெய்விகப் பெருமைகளை முன்வைத்து மண்ணகத்தாரும் தமது வாழ்வினை வளப்படுத்திக் கொள்வதில் விநாயக வழிபாட்டையே முதன்மையாகக் கொண்டதில் வியப்பில்லை.

''கணபதியே பரம்பொருள்'' என்று கோட்பாட்டு ரீதியில் காணபத்திய நெறியினர் இதனைத் தனிச் சமய நெறியாகக் கொண்டபோதும், ஏனையோர் ''விநாயகரே முதற் பொருள்'' என்று பிரணவப் பொருளின் வடிவமாக வழிபடுவது குறிப்பிடத்தக்கது. 'ஓம்' என்ற ஒலி உலக விந்தே விநாயகர் என்பது புகஞ்சலி யோக சூத்திரக் கருத்து. ''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' என்பது வெற்றிவேற்கை தரும் காப்புச் செய்யுளாகும். எத்தகைய ஐதீகங்களையும்விட, பிரணவ ஸ்பரூபி என்ற நிலையிலும் அதன் தோற்றமாகவும் அமைவதே விநாயக வடிவம் என்பது சிறந்த விளக்கமாக அமைகிறது. தேவாரம் பாடிய மூவரும், திருமந்திரம் பாடிய திருமூலரும் விநாயகரைப் பாடிப் பரவியுள்ளனர். விநாயகர் உபாசகியாகிய ஔவையார் விநாயகர் அகவல் பாடி மகிழ்ந்துள்ளார். வட மொழியிலும், செந்தமிழிலும் எழுந்த இவருக்குரிய பாமாலைகள் எண்ணிறந்தவை. தெய்விக அற்புதங்களின் பயனாய் இவருக்குரிய காரணப் பெயர்கள் அனந்தம். தல மகத்துவத்தினால் இவருக்குரிய சிறப்புப் பெயர்களும் எண்ணிறந்தவை. அரித்திர கணபதி, உச்சிஷ்ட மகாகணபதி, ஏரம்ப கணபதி, கங்கை கொண்ட விநாயகர், கடுக்காய் விநாயகர், கற்பக விநாயகர், சங்கட சதுர்த்தி விநாயகர், சங்கடஹர கணபதி, நிருத்த கணபதி, வலஞ்சுழி விநாயகர், பொல்லாப் பிள்ளையார், விகட சக்கர கணபதி, வித்தக கணபதி, முக்குறுணி விநாயகர் போன்ற திருநாமங்களால் தமிழகத்தில் விநாயகர் சிறப்புப் பெறுகின்றார். (1) இலங்கையிலும் இத்தகைய சிறப்புப் பெயர்களும் காரணப் பெயர்களும் விநாயகருக்கு உண்டு. வேத விநாயகர், அரசடி விநாயகர், கற்பக விநாயகர், சித்தி விநாயகர், கைலாயப் பிள்ளையார், மருதடி விநாயகர், பரராஜசேகரப் பிள்ளையார், அரசகேசரிப் பிள்ளையார், முறிகண்டி விநாயகர், மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் போன்ற தலங்கள் குறிப்பிடற்பாலன. காடுசூழ் பிரதேசங்களிலேயே விநாயக வழிபாடு பெருமளவிற் தோற்றம் பெற்றுள்ளது. வண்ணார்பண்ணையில் உள்ள காட்டுத்தறை என்னுமிடத்திலுள்ள பிள்ளையார் கோயில் இவ்வகைக்குச் சிறந்த உதாரணமாகும். (2)

இவருக்குரிய கயமுகாசுரசம்கார மூர்த்தி என்றபெயர்சிறப்புடைத்து கயமுகனால் தேவருக்கு ஏற்பட்ட துயர் நீர்க்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவராகவும், தனக்கு மேல் தலைவன் இல்லாததை உணர்ந்தும் விநாயகர் என்ற திருநாமத்துடனும் விளங்குபவர். தனது வலக் கொம்பை ஒடித்து கயமுகனை வதைத்து அடியவர் துயர் தீர்த்தவர் அவனைத் தன் வாகனமாகக் கொண்டு அருள் பாலித்தவர். சிவபெருமானுடைய திரிபுர தகனத்தின் போது தேரின் அச்சு முறித்த பெருமை இவரது தெய்விக முதன்மைக்குரிய விளக்கமாகும். 'அச்சிறுபாக்கம்' என்ற திருத்தலம் இத்தெய்விக வரலாற்றின் நினைவாகும். சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சேரு முன் தமது உபாசகியாகிய ஔவையாரை உடன் கைலாசம் சேர்த்த பெருமை, திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயத்தில் பொல்லாப் பிள்ளையாராக எழுந்தருளி மெய்கண்ட தேவருக்கு சூர்ணிகையை செவியறிவுறுத்தி அருளிய அற்புதம், திருநரையூரில் பொல்லாப் பிள்ளையாராக எழுந்தருளியிருந்து, நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை இருக்குமிடம் தெரிவித்து திருமுறைகண்ட பிள்ளையாராகத் திருநாமம் கொண்ட அற்புதம் காஞ்சி புராணம் விதந்து கூறும் விஷ்ணுவினது பாஞ்சசன்னிய சங்கைப் பெற்றுக் கொடுத்த அற்புதம், மகா பாரதம் எழுதியருளிய அற்புதம், விகடசக்கர விநாயகர், அகத்தியருக்கு அநுக்கிரகம் செய்த விநாயகர் போன்றவை விநாயக மகிமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள்.

தேவாரங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்புகள் அவர்தம் பெருமைக்குச் சிறந்த சான்றுகள். நாவுக்கரசரது திருவதிகை வீரட்டானத்தைப் பற்றிய பதிகத்தில் "கல மலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்" (3) என்றும் திருவீழிமிழலையில் இறைவனைப் பாடுங்கால் "கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் கயாசுரனை அவரால் கொல்வித்தார் போலும்" (4) ஆகிய குறிப்புகளால் அப்பர் விநாயகரைப் போற்றுவது நன்கு புலனாகின்றது. விநாயகரின் வழிபாட்டுப் பெருமைக்கு இவை சான்றாகின்றன. சம்பந்தர்; 'கரியின் மாமுகமுடைய கணபதி' என்று குறிப்பிடுகிறார். இவர் "பிடியதனுரு வுமை கொளமிகு கரியது" என்று திருவலி வலத்திலுள்ள இறைவனைப் பாடும் போது குறிப்பிடும் கருத்து சுப்ரபேதாகாமம் விநாயகர் தோற்றம் பற்றிக் கூறும் கருத்தை ஒத்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலும் இந்தியாவின் ஏனைய இடங்களிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியது போல இந்திய எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளிலும் சிறப்புற்று விளங்கியது. தமிழகத்திலே உழவர் தெய்வம் என்றும் யானைகள் மிகுந்த பண்டைய தமிழ் நாட்டில் விலங்கின வழிபாட்டின் அடிப்படையில் கணேசர் வழிபாடு தோன்றிற்று என்றும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. (5)

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் திருக்கோயில் மரபு வளர்ச்சி பெற்ற காலங்களில் விநாயகரின் சிற்பங்களும் பெருமளவில் இடம்பெற வாய்ப்பேற்பட்டது. விநாயகருக்கென்றே தனி ஆலயங்களும் புகழடைந்தன. வட இந்தியாவில் குப்தர் காலத்தில் எழுந்த கோயில்களுள் பிற்கால குப்தர்களால் கி.பி. 6-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தசாவதாரக் கோயில் குறிப்பிடத்தக்கது. சாஞ்சி மாவட்டத்திலுள்ள தேவகர் என்னும் இடத்தில் உள்ளது இக்கோயில். இது பஞ்சயதன வகைக் கோயில். விநாயகர், சிவன், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய ஐந்து கடவுளர்களின் படிமங்களும் ஒரே கோயிலில் அமைக்கப்பட்டிருத்தலால் இக்கோயில்கள் பஞ்சயதன கோயில் என்ற பெயர் பெற்றன இக்கோயில்களில் கருவறையில் மூலவராகச் சிவனும் பிராகாரத்திலுள்ள நான்கு மூலைகளிலும் தனித்தனி மேடைகளில் விநாயகர், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய நான்கு கடவுளரும் அமைக்கப்படுவர். (6) இங்கு விநாயகரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒட்டர நாட்டுக் கோயில்களில் (ஒரிசா) மிகப் பழைமை வாய்ந்த கோயிலான பரசுராமேசுவரன் கோயில் ஏறத்தாழ கி.பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலின் தோற்றக் காலம் பற்றி வரலாற்றாசிரியரிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. எவ்வாறாயினும் இக்கோயிலிலும் கணேசரது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிழக்கிலும் தெற்கிலும் உள்ள சுவர்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் சுவர்களில் மாடக் குழி வரிசையில் ஏனைய தெய்வங்களுடன் கணேசனின் உருவமும் காணப்படுகிறது (7) வட இந்தியாவில் குப்தர் காலத்தில் காணபத்திய வழிபாட்டு நெறி முக்கியத்துவமடைந்தது எனலாம். விநாயகரை பிரபஞ்சத்தின் தலைவனாகவும் மகாகணபதியாகவும் வழிபடுவது அக்கால மரபாக இருந்தது. (8)

கணேசர் வழிபாடு சிறந்து விளங்கிய இடங்களில் நேபாளமும் குறிப்பிடத்தக்கது. இங்கு பெண்கள் செவ்வாய்க்கிழமைகளில் கணேசருக்கென விரதம் அனுட்டிப்பர். கணேசர் வழிபாடு புத்தமதத்திலும் பிரபலம் அடைந்தது. புத்தர் தமது சீடனாகிய ஆனந்தனுக்கு ராஜகிருகத்தில் கணேசரின் ஹ்ருதய அனுபூதி மந்திரத்தை அருளியதாகக் கூறப்படுகின்றது. இந்த மந்திரத்திற்குரிய கணேசரின் வடிவம் பின்வருமாறு அமையும். முக்கண் பன்னிரு கரங்கள் அவற்றில் பல்வேறு ஆயுதங்கள், நடன நிலை ஆகியவையாகும் அந்த மந்திரம் "நமோபகவதே சூர்ய கணபதி

ஹ்ருதயாய'' என்று அமையும். (9) இம் மந்திரம் நேபாளத்தில் வழக்கில் உள்ளது. மகாயான பௌத்தரிடையே நேபாளத்தில் கணேசர் சிங்கத்தில் அமர்ந்தவராக ஹேரம்ப கணபதியாக விளங்கும் வடிவம் சிறப்பானதாகும், பௌத்தர்களின் கோட்பாட்டின்படி கணபதி யோக நிலையில் புத்தி தரும் தெய்வமாகவும் சித்தி தரும் சித்திதாதாவாகவும் காவற் தெய்வமாகவும் விளங்குகின்றார். (10) புத்தமதம் மற்றைய நாடுகளில் பரவத் தொடங்கிய காலத்தில் அது கணபதி கோட்பாடு அடங்கிய சில இந்துமதக் கூறுபாடுகளையும் தன்னுடன் கொண்டு சென்றது எனக்கொள்வதில் தவறில்லை. சீனாவில் பௌத்த சந்நியாசிகள் தாந்திரிக அடிப்படையிலான செயல் முறைகளையும் மூலநூல்களையும் பரப்பிய போது அவற்றிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளில் விநாயகருக்குரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. (11) சீனாவிலும் ஜப்பானிலும் விநாயகர் இருவகையாக அமைக்கப்படுகின்றார். முதலாவது தனிவடிவமாகவும் இரண்டாவதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்தோனேஷியாவில் பஞ்சமுக கணபதியாகவும் திபெத்தில் நிருத்திய கணபதியாகவும் விளங்கும் நிலையுள்ளது. (12)

இலங்கை வரலாற்றில் அநுராதபுரக் காலம் எனப்படும் ஆதி காலகட்டத்தில் இந்துமதம் அழியாத ஒரு மதமாக இந்துக்கள் மத்தியில் மட்டுமல்லாது பௌத்தர்கள் மத்தியிலும் செல்வாக்குடன் இருந்து வந்தமை பற்றி வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் கிடைப்பனவற்றுள் மிகிந்தலை சைத்தியத்தின் 'வாகல் கட' என்னும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கையில் பௌத்தர் மத்தியில் இத் தெய்வத்துக்கு இருந்த செல்வாக்கை மிகிந்தலையில் உள்ள புடைப்புச் சிற்பம் காட்டுவதாக அறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (13)

இலக்கியச் சிற்பச் சான்றுகளின்படி விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்தில் தமிழகத்திற் பரவியமை தெரியவருகின்றது. முதலாம் நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்று வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்றைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான் எனவும் இச்சிற்பம் தற்பொழுது திருச்செங்காட்டான்குடியில் உள்ளது எனவும் கூறப்படுகின்றது. சாளுக்கிய நாட்டில் கி. பி. 6–ம் 7–ம் நூற்றாண்டுக்குரிய விநாயகர் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் விநாயகரை சப்த கன்னியருடன் அமைத்தல் வழக்கமாகும். இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலிலும் (10) இத்தகைய சிற்பம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காஞ்சியில் உள்ள கோயில்களாகிய திரிபுராந்தகேசுவரரின் கோயில், மாதங்கேஸ்வரன் கோயில் ஆகியவற்றில் அர்த்தமண்டபத்தில் தென்புறச் சுவர்களில் விநாயகர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திரிபுராந்தகேசுவரர் கோயில்களில் கருவறை, அர்த்தமண்டபம் முதலியவற்றின் மூன்று வெளிப்புறச் சுவர்களிலும் சிறிய அளவில் பல விநாயகர் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. பிற்காலப் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட திருத்தணி விரட்டானேசுவரர் கோயிலின் தென்புறச் சுவரிலும் கணேசர் சிற்பம் உள்ளது. பல்லவர் கால விநாயகர் சிற்பங்கள் அமர்ந்த நிலை சிற்பங்களாகும். நாற்கரங்கள் – மேலிரு கரங்களில் பாசம், அங்குசம் ஆகியவை விளங்குவன. கீழ்ப்புற வலக்கையில் ஒடித்த தந்தம் கீழ்ப்புற இடக்கையில் மோதகம் ஆகியவை திகழ்கின்றன. முற்காலப் பாண்டியர், முத்தரையர்கள் காலக் குடைவரைக் கோயில்களுள், திருக்கோகரணம்,' குன்றாண்டார் கோயில் ஆகியவற்றில் கணேசர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டில் குன்றக்குடி, பிள்ளையார் பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களில் கணேசர் சிற்பங்கள் உண்டு. பிள்ளையார் பட்டியிலுள்ள சிற்பம் கி. பி. 6–ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் சிலர் கருதுவர் (14)

சோழர் காலக் கோயில்களின் அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் உள்ள தேவ கோட்டத்தில், அமர்ந்த நிலையில் விநாயகரை நிறுவுதல் வழக்கமாக இருந்தது. முற் காலச் சோழர் கட்டிய கோயில்களில் பரிவாரக் கோயில்களுள் விநாயகருக்கென ஒன்று அமைக்கப்பட்டது. விநாயகரது செப்புத்திருமேனிகளும் சோழர் காலக் கோயில்களில் இடம் பெற்றன. இவை பெரும்பாலும் நின்ற நிலையில் உள்ளன. விசய நகர, நாயக்க மன்னர் காலத்திலும் கணேசனின் பல்வகைச் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும் கோயில்களில் இடம்பெற்றன. அவற்றுள் சக்தி கணபதி, நாட்டிய கணபதி, உச்சிஷ்ட கணபதி, ஏரம்ப கணபதி போன்றவை குறிப்பிடத்தக்கன. (15)

தஞ்சையில் திருவலஞ்சுழி என்னுமிடத்தில் துதிக்கை வலப்பக்கமாக அமைந்த விநாயகர் வடிவம் உள்ளது. சாதாரண கடலை அளவு உள்ள பிள்ளையார் ஹம்பியில் உள்ளார். பவானி என்ற இடத்தில் கலைமகள் போன்று வீணையேந்திய நிலையிலும் ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பருபதம் என்ற இடத்தில் குழலூதும் நிலையிலும் உள்ளார். சிங்கத்தின் மீது அமர்ந்து பஞ்ச முகங்களுடன் கூடியவராக திருவொற்றியூரில் காட்சி தருகின்றார். மகாராஷ்டிரத்தில் மார்கோவன் என்னும் மிடத்தில் அஷ்டவிநாகராக தோற்றமளிக்கின்றார். அம்மை அப்பரை வலம் வந்து மாம்பழம் பெற்ற ஐதீகத்தைக் குறிக்கும் நிலையில் வட ஆர்க்காடு திருவலம் என்ற இடத்தில் எழுந்தருளியுள்ளார்

தமிழகத்தில் விநாயகர் பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்க வடநாட்டில் தேவியரோடு வழிபடப்படுவது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார் சித்தி புத்தி என்னும் இரு சக்திகளோடு கூடியவராகவும் வழிபடப்படுகின்றார். அறிவிற்கும் வெற்றிக்கும் அவரே தலைவர் என்பது இதன் உட்பொருள் சக்தியோடு கூடிய பிள்ளையார் வடிவங் கள் ஐந்தாகும். உச்சிட்ட கணபதி, மகாகணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி, இலட்சுமி கணபதி என்பனவைகளே அவை.

நாட்டியங்களைத் தொடங்குவதற்கு முன் விநாயகப் பெருமான் முதலில் வணங்கப் பட வேண்டியவரென்றும் அவரே மகாக்கிரமணி என்றும் தமது நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் குறிப்பிடுகின்றார். (17)

விநாயகருக்குரிய வழிபாட்டில் சுக்கிர வாரம், மாதந்தோறும் வரும் சதுர்த்தி விரதம், ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விசேடமானவை. விநாயகர் ஆலயங்களில் இத்தினங்களில் அபிடேகம் ஆராதனை, திருவுலா போன்றவை நிகழும். விநாயக ஷஷ்டி விரதமும் மிகவும் சிறப்புடையது. ஷஷ்டி விநாயகரையும். கந்தனையும் தியானஞ் செய்யும் நாளாகும். ஐப்பசி மாதத்தில் வருவது கந்த ஷஷ்டியாகும். திருகார்த்திகைக்கு மறுநாட் தொடங்கி இருபத்தொரு நாட்கள் கழிந்து வரும் ஷஷ்டியும், சதய நட்சத்திரமும் கூடிய தினத்தன்று வரை விநாயகரை வழிபடும் விரதம் 'விநாயக ஷஷ்டி' விரதம் என்றுங் கூறப்படும். இக்காலங்களில் கோயில்களில் விநாயகருக்கு விசேட அபிடேக ஆராதனைகளும் விநாயகர் அவதாரஞ் செய்த கதை படிப்பதும் இருபத்தோராவது நாள் கஜமுகாசுர சம்ஹாரம் நடைபெறுதலும் மறுநாள் இரவு குருட்டுப் பாம்பான விஷ்ணு வினது சாபவிமோசனம் அளித்தலுமாகிய கிரியைகள் நடைபெறும் விநாயக ஷஷ்டி விரதத்தை அனுட்டிப்பதனால் குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை, சந்ததியின்மை குடும்பச்சச்சரவு, நோய் யாவும் நீங்கிச் சுகம் பெறுவர். (18)

கோயில்களில் நைமித்திகக் கிரியைகள் நிகழ்வதற்குப் பூர்வாங்கமாக இடையூறு எதுவுமின்றி எடுத்த காரியம் நிறைவேற அருள் புரிய வேண்டி நிகழ்த்தப்படும் கணபதி ஹோமமும் குறிப்பிடத்தக்கது. இதில்கணபதியைஅக்கினிவடிவில்எழுந்தருளுவித்து ஹோம குண்டத்தில் உரிய அவிர்ப்பாகங்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மோதகம்,

அவல், அரிசி மா, கரும்பு, வில்வம், அறுகு, வாழைப்பழம், தேங்காய் போன்ற விநாய கருகுகந்த பொருட்கள் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் யானை ஒன்றுக்கு உரிய உபசாரங்கள் வழங்கி விநாயகராக ஆவாகனஞ் செய்து பூசை செய்து வழிபடுவதும் நிகழ்வதுண்டு. விநாயகருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி தேங்காய்கள் உடைத்து வழிபடுவதும் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் பஞ்சமுக விநாயகர் வழி பாடு சிறப்பாக இடம் பெறுகின்றது. விநாயகப் பெருமானுக்கும் இறைவனுக்குரிய திரு முகங்கள் போல ஐந்து திருமுகங்கள் உள்ளன. பஞ்சமுகார்ச்சனை சிறப்பாக நிகழ்வதுண்டு.

விநாயகருக்குரிய காயத்திரி மந்திரம் சிறப்புடையது. கணேச பஞ்சரத்தினம், விநாயகருக்குரிய சகஸ்ர நாமம் போன்றவை வழிபாட்டுக்குரியவை. வேழமுகம், விநா யகர் அஷ்டகம், விநாயக கவசம், விநாயகர் அகவல், விநாயகர் அனுபூதி போன்றவை யும் விநாயகர் வழிப்பாட்டுக்குரிய சிறந்த தோத்திரங்களாகும். சோழர் காலத்தில் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவை, திருநாரை யூர் விநாயகர் இரட்டை மணிமாலை, போன்ற இலக்கியங்கள் விநாயகருடைய மகிமை களைக் கூறுவனவாக அமைவதோடு இக்காலத்தில் விநாயகர் வழிபாடு சிறப்புற்றிருந்த தையும் அறிய உதவுகின்றன. *(19)*

பாரதியாரின் 'விநாயகர் நான் மணிமாலை' விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிப் போற்றும் சிறப்புடைய செஞ் சொற் பாமாலையாகும். விநாயகர் மகிமையை அது எடுத்துக் கூறும். விநாயகரிடம் எத்தகைய வேண்டுதல்கள் செய்ய வேண்டும் என் பதனை பின்வரும் அடிகள் விளக்குவனவாக உள்ளன.

''நன்னை யாளும் சமர்த்தெனக் கருள்வாய்
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்;
ஒளி பெற்றுக்

கல்வி பல தேர்ந்து, கடமையெல்லாம் நன்முற்றித்
தொல்வினைக் கட்டு எல்லாம் துறந்து இங்குப்
பழியற்று வாழ்ந்திடக் கண் பார்ப்பாய்!'' *(20)*

இவ்வாறு காலந் தோறும் மகிமை பொருந்திய விநாயகர் வழிபாடு முதன்மை வழிபாடாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. தெய்வீகப் பொழிவு மிக்க விநாயகர் பெருமானுக்கு ஊர் தோறும் கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி அவரது திருவரு ளுக்குப் பாத்திரராவோமாக!

## விநாயகர் திருவவதாரங்கள்

விநாயகரின் திருவவதாரங்கள் பன்னிரண்டு, ஆன்மாக்கள் உய்து ஈடேறும் பொருட்டு கஜானனர், விக்னராஜா, மயூரேசர், விநாயகர், வக்கிரதுண்டர், சிந்தாமணி, பாலசந்திரர், தூமகேது, கணபதி, மகோற்கடர், துண்டிவிநாயகர், வல்லபை கணேசர், என பன்னிரண்டு அவதாரங்களை எடுத்துள்ளார்.

# அடிக் குறிப்புகள்

1. நடராஜசிவம், **சகலஸித்தி விநாயகர்** நர்மதா பதிப்பகம், சென்னை, *1981* பக்.*23*
2. கோபாலகிருஷ்ணன், ப., **காட்டுத்தறை பிள்ளையார் கோவில் திருத்தல வரலாறு,** வண்ணார்பண்ணை, *1988*, பக். *23*.
3. **திருநாவுக்கரசர் தேவாரம்,** திருவதிகை வீரட்டானம், *4 : 5*.
4. மேற்படி, திருத்தாண்டகம், திருவீழிமிழலை *6 : 4*.
5. ஏகாம்பரநாதன், ஏ. **கோயிலும் இறை வழிபாடும்** கழக வெளியீடு, சென்னை. *1986*, பக். *3*.
6. தங்கவேலு, கோ. **இந்தியக் கலை வரலாறு** (முதல் புத்தகம்) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, *1976*, பக். *135*.
7. மேற்படி, பக், *148*.
8. Ratna Ma Navaratnam, **Aum Ganesa,** Vidya Bhavan, Jaffna, 1978, P. 193.
9. Ibid, **P, 192,**
10. **Ibid, P, 193,**
11. மகாதேவன், டி. எம். பி. **இந்து சமயத் தத்துவம்,** தமிழ் வெளியீட்டுக் கழகம் சென்னை, *1964*, பக். *170*.
12. **Ratna Ma Navaratnam, Aum Ganesa, P 192**
13. இந்திரபாலா, கா. ''ஆதி இலங்கையில் இந்து மதம்'' **ஐயரத்தினம் உருவச்சிலை திறப்பு விழா சிறப்பு மலர்,** மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, *1978*, பக். *19 — 20*
14. ஏ. ஏகாம்பரநாதன், ஏ. **கோயிலும் இறைவழிபாடும்,** பக். *3 — 6*
15. மேற்படி, பக். *7*
16. நடராஜசிவம், **சகலஸித்தி விநாயகர்,** பக் *21 — 22*
17. பாலசுந்தரக்குருக்கள், கு. 'விநாயக சுவரூபம்' **நவாலியூர்ச் சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேகமலர் 1971** பக். *5*.
18. சுப்பிரமணியன், கி. நியாய சிரோமணி, மேற்படி கும்பாபிஷேகமலர், பக். *42—45*,
19. ஏகாம்பரநாதன், ஏ. **விநாயகர் வழிபாடு,** பக். *5*.
20. புலியூர்க்கேசிகன், **சௌபாக்கியத்திற்கு விநாயகர் வேலவர் வழிபாட்டு முறைகள்,** மாருதி பதிப்பகம், சென்னை, *1983*, பக். *43 — 44*

## விநாயகர் வழிபாடு

அன்பினொடு கைமாற்றி, முட்டியாகப் பிடித்த இரு கைகளால் சிரசில் மும்முறை குட்டிக் குப்பிடுவதாலும், இரு கைகளையும் எதிர் எதிராக மாற்றி ( × வடிவில் ) இரண்டு செவிகளையும் பிடித்தபடி, தொடையும் கணைக்காலும் ஒன்றை ஒன்று தொடும் படியாக மூன்று முறை தாழ்ந்து எழுந்து வணங்குதலே பிள்ளையார் வழிபாடு. இதனை எவரும் இலகுவாகச் செய்யலாம்.

# திருவுருவங்களை கல்லாலும், செம்பாலும் அமைத்த காரணம் யாது?

- திருமுருக கிருபானந்த வாரியார் -


உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கி இருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகிறது. சிவ வேள்வி வளர்த்து வேள்வியில் எழும் சிவவொளியை நிறைகுடமாகிய கும்பத்திற் சேமித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே, சோதிமயமான ஒளியின் ஆற்றல் அக்கற் சிலையில் அமைந்திருக்கிறது. இதனை நம் முன்னோர் கருத்திற் கொண்டே மூலஸ்தானத்தில் அமைந்த தெய்வ உருவங்களைக் கல்லிலே அமைந்தனர்.

ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை ஊருக்குள்ளே ஒளிபாய்ச்சும் கம்பி செம்பினால் அமைந்திருப்பதைக் காண்க. செம்புக் கம்பிக்கு மின் பாய்ச்சும் ஆற்றல் உள்ளது. ஆகவே, மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உயர்வு கருதித் திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்தனர் நம்முன்னோர்.

நம்முன்னோர்களின் மதிநுட்பத்தை எண்ணிப் பார்க்கும் போது உள்ளம் உருகுகின்றது. இத்தகைய இந்து மதம் போதித்த உண்மைகளே இன்றைய விஞ்ஞான யுகத்திற்கு வழியமைத்திருக்கிறது. மற்றெல்லா மதங்களிலும் பார்க்க இந்து மதம் அர்த்தமுள்ள மதமாகத் திகழ்வதை யார் மறுக்க முடியும்?



கும்பங்கள் வீதிவலம்வரப் புறப்படுமுன்னர், சிவஸ்ரீ. பரமேஸ்வரக் குருக்கள் தீபாராதனை நிகழ்த்துகின்றார்



கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது

# யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்

**(யாழ்ப்பாணத்திற் சமஸ்கிருத நெறிப்படுகை தொழிற்படும் முறைமைகள் சில பற்றிய ஒரு பிராரம்பக் குறிப்பு. வாக்கிய பஞ்சாங்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது)**

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

சமூக வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரே தன்மைத்தவாகவோ, அல்லது மாற்றத்துக்கான முயற்சிகள் அற்றதாகவோ இருப்பதில்லை. சமூக வாழ்க்கை வட்டத்தினுள் எப்பொழுதும், இடையறாத அசைவியக்கம் இருந்துகொண்டேயிருக்கும். குறிப்பிட்ட அந்தச் சமூகத்தின் பாரம்பரியங்கள், நியமங்கள், ஆதர்சங்கள், விழுமியங்களுக்கேற்ப ஒவ்வொருவரும் [இது தனிப்பட்ட ஆள் என்ற அடிப்படையில் நடப்பது அன்று; பெரும்பாலும் குடும்ப அலகு அடிப்படையிலேயே நடப்பதாகும்] ஏதோ ஒரு வகையில், இருப்பதிலும் பார்க்க மேல்நிலைப்பட முயன்று கொண்டிருப்பார்கள். வேறு சிலர் அந்தச் சமூக அமைப்பு முழுவதையும் மீறிய மாற்றத்துக்காக முயன்று கொண்டிருப்பார்கள். அவ்வாறு மாற்றத்தை விரும்புவோர் தமது இலட்சிய சமூக அமைப்பாக, வேறொரு அமைப்பினையே ''மாதிரி''யாகக் கொண்டிருப்பார்கள். அது சமூக மாற்றத்துக்கான முயற்சியாகும். இக் கட்டுரையில் அத்தகைய மாற்ற முயற்சிகள் பற்றி நோக்கப்படாது முதலிற் குறிப்பிடப் பெற்றதான, சமூகத்தினை ஏற்றுக்கொண்டு அதற்குள் தமது நிலையை மேனிலைப்படுத்துவதற்கான முயற்சி பற்றியே நோக்கப்படவுள்ளது.

சமூக அசைவியக்கம் [Social Mobility] என்பது இருவகையாகத் தொழிற்படலாம்.

[1] ஒருவர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அன்றேல், ஒரு சமூகக் குழுமத்திலிருந்து இன்னொரு சமூகக் குழுமத்துக்குச் செல்லுதல். இதனை கிடைநிலையான [Horizontal] அசைவியக்கம் எனலாம்.

[2] ஒருவர் ஒரு குறிப்பிட்ட சமூக மட்டத்திலிருந்து இன்னொன்றுக்குச் செல்வது. இது நிமிர்நிலை (Vertical) யானது. கீழும் செல்லலாம். மேலும் செல்லலாம். ஆனல் அந்தச் செயற்பாட்டோடு அவரது சமூக நிலை மாறும்.

இங்கு நாம் பேசவிருப்பது இரண்டாவது அசைவியக்கம் பற்றியே.

இவ்வாறான மேனிலைப்பாட்டு அசைவியக்கம் ஏற்படுகின்றபொழுது, குறிப்பிட்ட ஒருவரின் அல்லது ஒரு குடும்பத்தின் அல்லது குழுமத்தின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெறும் பல விடயங்களும் புதிய நிலையினை எய்தும். முந்திய நிலையிலிருந்த சில விடயங்கள் கைவிடப்படலாம், அல்லது முந்திய நிலையிற் காணப்பட்ட அன்றேல் கடைப்பிடிக்கப்பட்ட விடயங்கள் புதிய நிலைமைக்கேற்ப புது மெருகுடன், புது விளக்கங்களுடன் (தொடர்ந்தும்) போற்றப்படலாம். எவ்வாறாயினும் ஒரு ''தொடர்ச்சி'' இருப்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

மூன்றாவது உலக நாடுகளில் இத்தகைய சமூக அசைவியக்கம் ஏற்படும் பொழுது சிக்கற்பாடுடைய பல காரணிகள் தொழிற்படுவதை நாம் அவதானிக்கலாம். நவீனமயப்பாடு (Moderniatzion) ஒரு காரணியாகும். இது பெரும்பாலும் மேனாட்டு மாதிரியமாக (Western Model) அமைத்துக் கொள்வதாகும். ஆனல் அதேவேளையில் இந்த நவீனமயப்பாடு என்பது பாரம்பரியத்தையும் மரபையும் நிராகரிப்பதாக இருக்காது. அதாவது தமது சமூகத் தனித்துவம், பண்பாட்டுத் தனித்துவம் ஆகியன பேணப்படும் முறையிலேயே இந்தச் சமூக அசைவியக்கம் இருத்தல் வேண்டுமென்ற நிலைப்பாடு காணப்படும். மேனாட்டுத் தாக்கத்தினை மறுதலிக்க எடுத்த முயற்சிகள் மூலம், இவர்கள் தமது பாரம்பரியத்தினதும் (Tradition) பண்பாட்டினதும் (Culture) ''மேன்மை''யை, புராதனத் தன்மையை, தமக்கு அது இன்றியமையாததாக இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியத்தை உணர்ந்து கொண்டனர்.

இந்தியப் பண்பாட்டுச் சூழலில் இந்தச் ''சமூக மாற்றம்'' ஏற்பட்டபொழுதும், ஏற்படுத்தப்பட்ட பொழுதும் பல சுவாரசியமான நடைமுறைகள் தோன்றின. இந்தியப் பாரம்பரியத்தின், பண்பாட்டின் புராதனத் தன்மை, சிறப்பு ஆகியனவற்றை உணர்ந்து அவற்றைப் பேணியவாறே மேனிலைப்படுதல் என்பது அம் மரபுக்குள் நின்று செய்யப்படக்கூடிய ஒன்றன்று. ஏனெனில் இந்தியச் சமூக அமைப்பு அதிகார வைப்பு முறைப்பட்டது (Hierarchical) ஆகும். அந்த வைப்பு முறையில் சமத்துவம் கிடையாது. ஆனல் நவீன சமூக மாற்றமோ ஏதோ ஒரு வகையில் சமத்துவத் தன்மையை வற்புறுத்துவதாகும். அதேவேளையில், இந்த அசமத்துவங்களினூடேயும், இந்தியப் பண்பாட்டின் புராதனத் தன்மையும், அதன் தனித்துவமும் அழுத்திக் கூறப்பட்டன.

இத்தகைய ஒரு நிலையில், நவீனசூழலில் ''முன்னேற்றமான'' சமூக ''மாற்ற''த்துக்குட்படும் குழுமங்கள், இந்தியப் பண்பாட்டு வட்டத்தினுள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது முக்கியமான ஒரு விடயமாகின்றது.

எந்த ஒரு பண்பாட்டுச் சூழலிலும், அதன் விழுமியங்கள், மரபுகள், ஆதர்சங்கள் போற்றப்படுவதில்லை, அந்தச் சமூக இயக்கம் தொடருவதில் மதத்துக்கு முக்கியமான இடமுண்டு. பண்பாடு என்பது குறிப்பாக தொழில்நுட்ப முன்னேற்றமில்லாத சூழலில் மதத்தினையே மேலாண்மையுடைய அமிசமாகக் கொண்டிருக்கும். அச்சூழலில் மதமின்றி தனி மனிதனது, அன்றேல் குடும்பத்தினது, அன்றேல் குழுமத்தினது சமூக உறவுகள் சீராக ஒழுங்கமைக்கப்படுவதில்லை. மதத்தின் முத்திரை அந்தச் சமூகத்தின் இயங்கு நிலையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

மதம் என்பது அடிப்படையில் நம்பிக்கையும் சடங்குகளுமே (கரணங்களுமே) யாகும். நம்பிக்கை காரணமாகச் சடங்குகள், சடங்குகள் காரணமாக நம்பிக்கை என அவை ஒன்றையொன்று மேவி, மருவி நிற்கும். இந்தச் சடங்குகள் நம்பிக்கைகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட ''வாழ்க்கை நோக்கு'', ''உலக நோக்கு'', ''தரிசனம்'' (Vision) வரும். அந்தத் தரிசனம்தான், அதற்குரிய எடுகோள்களுடன், மத ஞானமாக, இறையியலாக (Theology), பின்னர் ''மெய்யியலாக'' (Phiosophy) முகிழ்க்கும்.

நம்பிக்கையும் சடங்குமின்றி அவற்றுக்கான குறியீடுகள், ஆற்றுவோர், ஆற்றப்படும் முறை, ஆற்றப்படுவதற்கான அமைப்புக்கள் ஆதியனவின்றி சமூக இயக்கம் நடைபெறுவதில்லை.

மேனிலைப்பாடான சமூக அசைவியக்கம் ஏற்படுகின்றபொழுது, உயர்நிலை எனக் கருதப்படுகின்ற ஒரு முறைமைக்கமைய அமைந்து கொள்ளும் தன்மையும், அதேவேளையில் முன்னர் காணப்பட்டவற்றின் தொடர்ச்சியும் முக்கியமானவையாகும்.

இந்தியச் சூழலில் சமூக மாற்றத்தின் பொழுது மதம் (நம்பிக்கைகள், சடங்குகள்) எத்தகைய இடத்தைப் பெறுகின்றது, எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதைப் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது, பேராசிரியர் எம்.என். ஸ்ரீநிவாஸ் அவர்களாற் செய்யப்பட்ட ஆய்வாகும். குடகு மக்களிடையே (Coorgs) சமயமும் சமூக மாற்றமும் தொழில்படும் முறையை ஆராய்ந்த அவர் நவீன நிலைப்பட்ட சமூக மாற்றத்தினிடையே காணப்படும் சமயத் தொழிற்பாட்டை அவர் சமஸ்கிருத நெறிப்படுகை (Sanskritization) எனக் குறிப்பிட்டார்.

அக் கொள்கையின் அடிப்படை இதுதான். இந்தியச் சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்துக்கு ஆளாகும் ஒருவர் அன்றேல் குழுமம், தமது மத முறைமைகளைப் படிப்படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற அதாவது சமஸ்கிருத எழுத்துக்களில் உள்ளதென நம்பப்படுகின்ற, முறைமையில் அமைத்துக் கொள்கின்றூர்/றது. இப்படிச் சொல்கின்றபொழுது தாம் இதுவரை கடைப்பிடிக்காத சடங்குகள், நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் ஏற்படும் அதேவேளையில் தாம் இதுவரை கடைப்பிடித்து வந்தனவற்றை சமஸ்கிருத நிலைப்படுத்தி அல்லது சமஸ்கிருதமயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும்.

இத்தகைய ஒரு நடைமுறை உள்ளது என்பதனை எவரும் மறுக்கவில்லை. ஆனுல் இந்த நடைமுயை, ஸ்ரீநிவாஸ் அவர்கள் குறிப்பிட்டதுபோல ''சமஸ்கிருத நெறிப்படுகை''. (Sanskritization) எனக் குறிப்பிடலாமா அல்லது வேறொரு பெயர் கூறலாமா என்பது பற்றிய நீண்டதொரு விவாதம் நடைபெற்றது. ''பிராமணமயப்படுத்தல்'', (Brahminization) போன்ற சொற்றொடர்கள் மாற்றுகக் கூறப்பட்டன. ஆனுல் கால ஓட்டத்தில் ''சமஸ்கிருத நெறிப்படுகை'' (Sansklitization) எனும் பதமே நின்று நிலைத்தது. சமூகவியலாளரும், வரலாற்றுசிரியர்களும் இம் முறைமையின் தொழிற்பாட்டினை நன்கு விளக்கியுள்ளனர். ஸ்ரீநிவாஸின் "Social Change of India" என்னும் நூலில் (OUP) இக் கொள்கை நன்கு விளக்கப்பெற்றுள்ளது.

## II

இலங்கைத் தமிழரிடையே, குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களிடையே நடைபெறும் மேனிலைப்பாடு மத வழிபாட்டு முறைகளில் எவ்வாறு தொழிற்படுகின்றது. எவ்வெவ் வகையில் தெரியவருகின்றது என்பதனை நோக்குவதற்கு, முதலில் இந்தச் சமூகம் எவ்வாறு ''அமைக்கப்'' பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

யாழ்ப்பாணச் சமூகம், தென்னிந்தியச் சமூகம் போன்று அதிகார வைப்பு முறை நெறிப்பட்டதே (Hierarchical) இந்த அதிகார வைப்புமுறை சாதிமுறைமை (Caste System) யினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதி முறைமை இந்திய முறைமையிலிருந்து வேறுபட்டது. இங்கு "பிராமண மேலாண்மை" கிடையாது. இங்கு மேலாண்மையுடைய வெள்ளாள குலத்தினர் நான்கு வருணமுறைமையினுள் சாஸ்திரப்படி "சூத்திரர்களே". இந்தத் தடையிலிருந்து விடுபடுவதற்காக "சற்சூத்திரர்" என்ற ஒரு கோட்பாட்டினையே உருவாக்கவேண்டியிருந்தது. இதனை ஆறுமுக நாவலரின் எழுத்துக்களிலேயே காணலாம். அத்துடன் இந்தச் சற்சூத்திரக் கோட்பாடு காரணமாக சாஸ்திர அங்கீகாரமற்ற ஆனால் மரபு அங்கீகாரமுடைய "பஞ்சமர்" கோட்பாடு இங்கு அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றது.

சற்சூத்திரக் கோட்பாடு வலியுறுத்தப்படுகின்றமைக்கும் சைவ சித்தாந்தக் கொள்கைநிலைப்பாட்டுக்கும் ஒரு சமூக இயைபுண்டு. விரிவஞ்சி அதனை இங்கு வலியுறுத்த விரும்பவில்லை.

பிரித்தானியா ஆட்சிக் காலத்திலும், அதன் பின்னரும் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாக சாதி முறைமையின் இறுக்கம் குறைந்துள்ளது. கல்வி வாய்ப்பு உத்தியோக வாய்ப்பு, (புதிய தொழில்களின் வருகை புதிய தொழினுட்பங்கள் கொண்டு வந்துள்ள புதிய தொழில்கள்) புதிய ஊதிய முறைமைகள், வேதன உழைப்பு (Wage Labour) ஏற்படுத்தும் சமத்துவம் ஆகியன காரணமாகச் சாதியமைப்பின் இறுக்கம் குறைகின்றது.

உண்மையில் சாதியமைப்பின் இறுதிச் சின்னங்களில் ஒன்றாக விளங்கியது, விளங்குவது கோயில்கள் "திறக்கப்" படாமலிருப்பதாகும். முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த சாதியினர், நவீன காலத்தில் தமக்கு ஏற்பட்டுள்ள சமூக மேனிலைப் பாட்டு அசைவியக்கத்தை ஏற்புடைமையுள்ள ஒரு முன்னேற்றமாக்கிக் கொள்ள விரும்பியதன் காரணமாகவே, யாழ்ப்பாணத்தில் கோயில் திறப்பு நடவடிக்கை தென்னிந்தியாவிலும் பார்க்க வன்மையுள்ள கோஷமாக அமைந்து வந்துள்ளது.

இந்தச் சாதியமைப்பின் தளர்வு காரணமாக, முன்னர் நிலவிய சாதிகள் பல இப்பொழுது அருகிப்போய், பெருஞ்சாதிக் குழுக்களே முக்கியமாகிக் கொண்டு வருகின்றன. "கள்ளர், மறவர், கனத்த அகம்படியார் மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர்களானுர்கள்" என்பது இதனை நிரூபிக்கும். யாழ்ப்பாணத்தின் முந்திய சாதிகள் பல இப்பொழுது அருகிவிட்டன. வெள்ளாளர்,கோவியர்,கரையார்,கம்மாளர் எனப் பெரு வட்டங்களாகவுள்ளன.

சாதியமைதியின் இறுக்கம் குலைந்தாலும் சாதித்திரள்நிலை தரும் "குழும ஒருங்குணர்வு" இன்னும் தளரவில்லை. விவாகம் பெரும்பாலும் சாதியமைப்புக்குள் நடைபெறும் ஒன்றாக இருப்பது இதற்கான முக்கிய காரணமாகும்.

சாதியமைப்பு இந்நிலையிற் காணப்பட, அதேவேளையில், கல்வி வளர்ச்சி காரணமாகவும், இனக்குழும ஒருமைப்பாட்டுணர்வு காரணமாகவும் மரபு பண்பாடு பற்றிய உணர்வும் பெரிதும் வளர்ந்துள்ளன. சாதியமைப்பின் தன்மை காரணமாக பண்பாட்டுப் பகிர்வுப் பங்கெடுப்பில் பின் நிற்க எவரும் தயாராகவில்லை. முன்னர் நிகழ்ந்தது போன்று சமய மாற்றத்தினுள் தமது சமூக விமோசனத்தைக் காணவும் இவர்கள் விரும்பவில்லை. இதனால் ஒவ்வொரு குழுமத்தினரும், குழுமங்களின் குடும்பத்தினரும் தமது சமூகநிலை மேனிலை எய்த எய்த, தமக்குக் கூட்டிய புதிய சமூக அந்தஸ்துக்கேற்ப, தமது மத அநுட்டானங்களையும் அமைத்துக்கொள்ள விரும்பினர். அதாவது யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணத்துச் சூழலுக்கேற்ப சமஸ்கிருதநெறிப்படுகை தொழிற்படத் தொடங்கிற்று.

III

யாழ்ப்பாணத்துச் சூழலுக்கு ஏற்ப நிகழும் சமஸ்கிருத நெறிப்படுகையின் மிக முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்று, ஒவ்வொரு சாதிக்கும் அல்லது ''பகுதி''க்குமுள்ள கோயில்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமையாகும்.

நமது சமூக ஒழுங்கமைப்பில் கோயில் மூக்கிய இடம் பெறுகின்றது. அது சமூகச் செல்வாக்கின், சமூகக் கட்டுப்பாட்டின் முக்கிய மையங்களில் ஒன்று. அந்தக் கோயிலில் நமக்குள்ள அந்தஸ்துக்கும், நமக்குச் சமூகத்திலுள்ள அந்தஸ்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கிராமங்களிலுள்ள கோயில்கள் திருவிழாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள முறைமையினை நன்கு அவதானித்தால் இது புலனாகும்.

புதிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் தங்கள் அந்தஸ்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளக் கோயிலில் இடம்பெற விரும்புகின்றனர். அதற்கு அந்தக் கோயில் இடம் கொடுக்கவில்லையெனில், அவர் தனக்கு அந்த இடத்தைத் தரும் கோயிலுக்குச் செல்வதோ, கோயிலைத் ''தோற்றுவிப்பதோ'' இயல்பே.

மேலும் சமூக மேனிலைக்கு வந்துள்ள ஒருவரிடம் தமது நம்பிக்கையின் தளமாக விளங்கிய வழிபாட்டுத் தலத்தையும் வழிபடு கடவுளையும் தனது புதிய சமூக அந்தஸ்திற்கேற்ப வைத்து வணங்கும் ஊக்கம் ஏற்படுவதும் இயல்பே. அவ்வாறு மேனிலைப்படும் பொழுது வழிபாட்டுத்துறையில் இவற்றின் பிரதிபலிப்புக்கள் தெரிவது இயல்பே.

இதனை அறிவதற்கான முக்கியமான சான்றாக அமைந்திருப்பது நமது அன்றாட சமூக – சமய வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறும் பஞ்சாங்கமாகும். இந்துத் தமிழ் மக்களிடையே மிகப் பெரிய அளவிற் பயன்படுத்தப்படும் ஒரேயொரு நூல் பஞ்சாங்கமே.

இந்தப் பஞ்சாங்க ஆக்கம் இரு வேறு மரபுகளில் வருவது. ஒன்று வாக்கிய மரபு, மற்றது கணித மரபு. வாக்கிய மரபே யாழ்ப்பாணத்தில் பெரிதும் போற்றப்படுவது. ஒவ்வொரு வருடமும் குறைந்தது **65,000** (அறுபத்தையாயிரம்) பிரதிகள் அச்சிடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

வாக்கிய பஞ்சாங்கங்களைக் காலவரன்முறை ஒழுங்கமைப்பில் வைத்து நோக்கும் பொழுது சமூக மேனிலைப்பாட்டுக்கும் வழிபாட்டுக்குமுள்ள தொடர்புகள் தெட்டத் தெளிவாக தெரிய வருகின்றன.

இந்தக் கட்டுரையாக்கத்துக்காக பத்தாண்டு இடைவெளிப்பட்ட பஞ்சாங்கங்களைச் சான்றாகக் கொள்ளப்பட்டுள்ளன. வழிபாட்டின் சமூகத் தளங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மைகளை நன்கு புலப்பதிவு செய்துகொள்வதற்கு இது உதவும்.

பின்வரும் வருடங்களுக்குரிய வாக்கிய பஞ்சாங்கங்கள் பயன்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| ரத்தாக்ஷி வருடம் | *(1924—25)* |
| பிரமோதூத வருடம் | *(1930—31)* |
| விக்கிரம வருடம் | *(1940—41)* |
| விரோதி வருடம் | *(1949—50)* |
| பிலவ ,, | *(1961—62)* |
| சாதாரண ,, | *(1970—71)* |
| ராக்ஷத ,, | *(1975—76)* |
| ரௌத்திரி ,, | *(1980 ..81)* |
| விபவ ,, | *(1988...89)* |

இப் பஞ்சாங்கங்களைப் பயன்படுத்தும் பொழுது அவ்வக் காலங்களில் நடைபெற்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களையும் மனத்திற் பதித்துக்கொள்ளல் அவசிய மாகும். அந்தப் பின்புல அறிவின்றி பஞ்சாங்கங்களில் கிடைக்கும் தகவல்களை உரிய முறையில் வியாக்கியானித்தல் முடியாது.

## IV

சமஸ்கிருதநெறிப்படுகையின் முக்கிய மூலாதார பண்பு வழிபாடு இந்துமத மரபின் செந்நெறி மரபு என்று கருதப்படும். சமஸ்கிருத நெறிப்பட நடாத்தப்படுவதே யாகும்.

பஞ்சாங்கம் என்பது நியமமான இந்து நடைமுறைகளைத் தரும் ஒரு ஆவணமாகும். ஒரு வழிபாட்டிடம், அங்கு நடக்கும் வழிபாடு, வைபவம் ஆகியன பஞ்சாங்கத்தில் இடம் பெறுவதே இவை உயர்நெறியைச் சார்ந்தவை என்ற மனப்பதிவை ஏற்படுத்தும்.

வழிபாடு, வழிபாட்டு வைபவம் அதற்குரிய காலம் பற்றிப் பஞ்சாங்கங்களிற் கிடைக்கப்பெறும் தகவல்கள், அவை எத்துணை ஒழுங்கமைப்புடன் போற்றப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டும் பஞ்சாங்கங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யும் ஆய்வில் முதன் முதலில் நமது கவனத்தை ஈர்ப்பது பஞ்சாங்கத்தில் இடம்பெறும் வழிபாட்டிடங் களின தொகையும், வழிபாட்டு முறைமைகளின் தொகையும் அதிகரித்துச் செல்வதேயா கும். வழிபாடு, வைபவம் பற்றிய தகவல்கள் குறித்த வழிபாட்டிடப் பொறுப்பாளர் களிடையே அனுப்பப்பெறுதல் வழக்கம் என்பதனையும் முக்கிய கோயில்களுக்குப் பஞ்சாங் கக்காரர் தாமே முன்னின்று திகதிகளைக் குறித்துக் கொள்வர் என்பதனையும் நாம் இங்கு மனங்கொள்ளல் அவசியம்.

தேவாலய உற்சவவிவரங்கள் தரப்படும் முறைமையில் காணப்படும் மாற்றங்களை அவதானித்துக்கொள்ளல் நன்று.

*1924—25*

தேவாலய உற்சவங்கள் எல்லாம் (பொங்கல் உட்பட) ஒருங்கே குறிப் பிடப்படுகின்றன. ஆலயங்களின் தொகை 66

*1930—31*

உற்சவங்கள் கிராமவாரியாக (அகரவரிசைப்படுத்தப்பட்டு) தரப்பட்டுள் ளன. உதாரணமாக கரணவாய் – கரவெட்டிக்கு இரண்டு கோயில்களின் பெயர்களேயுள்ளன. 1988–89க்கு 12 கோயில்கள் இடம்பெறுகின்றன.

*1940—41*

இந்திய, இலங்கைத் தேவாலயங்களின் உற்சவங்கள் தனித்தனியே தரப்படுகின்றன.

ஆனல் இப்பொழுது மாதவாரியாக உற்சவங்கள் தரப்படுகின்றன. இந்த முறையே தொடர்ந்து பேணப்படுகின்றது.

*1949—50* இல் பின்வரும் முறையில் விபரங்கள் தரப்படுகின்றன.

1. நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள்
2. தேவாலய மகோற்சவம் (மாதவாரியாக)
3. தேவாலய அலங்கார உற்சவம்
4. தேவாலய சங்காபிஷேகம், தண்டிகை
5. தேவாலய அபிஷேக தினம்
6. தேவாலய பொங்கல்
7. தேவாலய விஷேச உற்சவம்

இக் கட்டத்தில் மஹோற்வசம், அலங்கார உற்சவம், சங்காபிஷேகம் என்பனவற்றின் வேறுபாட்டை விளங்கிக்கொள்ளல்வேண்டும். மஹோற்சவம் என்பது வருடத் திருவிழாவாகும். இது நடக்கும் கோயில்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்டனவாக வருட மஹோற்சவத்துக்கான தகுதியுடையனவாயிருத்தல் வேண்டும். இத்தகைய கோயில்களில் ஆகம முறைமை இயன்றளவு முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சங்காபிஷேகம் என்பது மஹோற்சவ நிலைக்குக் குறைந்த ஒன்ருகும். வருடத்தில் ஒருமுறை சங்காபிஷேகம் அல்லது அபிஷேகம் நடைபெறும்.

எனவே கோயில்கள் தரவாரியாகப் பிரிக்கப்படுவதற்கான நிலைமையுண்டு என்பதனை மனதிற் கொள்ளல் வேண்டும்.

பொங்கல் என்பது உண்மையான ஆகம வணக்கம் அன்று. அது கிராமிய நிலைப்பட்ட வழிபாட்டு முறைமையேயாகும்.

பொங்கல், குளிர்த்தி என்பது ஆகமஞ்சாரா வழிபாட்டு முறைமைகளாகும். 1949–50 பஞ்சாங்கத்திற் பொங்கல் செய்யப்படும் கோயில்களின் பட்டியல் தரப்படுகின்றது. ஆனல் 'குளுத்தி' பற்றிய பஞ்சாங்கத் தகவல்கள் 1970–71 இல் காணப்படுகின்றது. இங்கு குளுத்தி என்பது சமஸ்கிருதநெறிப்பட்ட மொழிநடையில் ''திருக் குளிர்ச்சி'' எனக் குறிப்பிடப்படுகின்றது.

பொதுவாக நோக்கும் பொழுது வருடாவருடம் கோயில்களின் தொகை அதிகரித்துச் செல்வதைக் காணலாம். பஞ்சாங்க அந்தஸ்து கோயிலுக்கு அவசியமெனும் அபிப்பிராயம் வளர்வதை நன்கு அவதானிக்கலாம், பூரண ஆகம முறையிலான வழிபாடுகள் அற்ற இடங்களும் பொங்கல், குளிர்ச்சி எனும் வழிபாட்டு முறைமைகள் மூலமாகவே இடம்பெற்று விடுகின்றன,

இவ்வாறு பஞ்சாங்க அந்தஸ்துப் பெறும் கோயில்களின் தொகை ஒரு புறம் அதிகரித்துச் செல்ல மறுபுறத்தில் சில முக்கியமான கோயில்களின் உற்சவங்கள் தனியே தரப்படும் முறைமையும் வளர்ந்து வருவதைக் காணலாம். நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள் 1949—50 இலிருந்து தனித்துக் குறிப்பிட பெறுகின்றன. அடுத்து 1970—71 இல் நல்லூருடன் கோட்டை முனியப்பர், வண்ணை வெங்கடேசப் பெருமாள், உசன் கந்தசாமி கோயில்கள் இடம்பெறுகின்றன. 1975—76 இல் நல்லூர் முனியப்பர் (முனீஸ்வரன் எனும் பெயரை நோக்குக) காரைநகர் சிவன், பொன்னுலை வரதராஜப் பெருமாள் கோயில்கள் இடம் பெறுகின்றன. திருக்கேதீஸ்வரத்தின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதையும் நாம் அவதானித்துக் கொள்ளலாம். திருக்கேதீஸ்வரத்தைப் பொறுத்தவரையில், திருவிழாக்களின் பெயர்களும் நடத்துபவர்களின் பெயர்களும் பஞ்சாங்கத்தில் இடம்பெற்றன.

தனிப்பட்ட கோயில்களின் உற்சவ விபரங்களைத் தனிப்படத் தரும் இச்செயல்நெறி 1980—81 இல் உச்சக் கட்டத்தை அடைவதை அவதானிக்கலாம். ரௌத்திரி வருடப் பஞ்சாங்கத்தில், நல்லூர், கோட்டை முனீஸ்வரரைவிடப் பின்வரும் கோயில்களும் இடம்பெறுகின்றன.

தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயம்
அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்
மட்டுநகர் மாமாங்கேஸ்வரப் பிள்ளையார்
ஏழாலை அம்பலவாணேஸ்வரர்
திருக்கேதீஸ்வரம்

காரைநகர் சிவன் (ஈழத்துச் சிதம்பரம்)
நயினுர்தீவு நாகபூஷணியம்மை
(நயினுதீவின் தரப்பட்டுள்ள முறைமையை நயினுர் தீவு நோக்குக)
ஏழாலை புவனேஸ்வரி அம்மன்
மாவிட்டபுரம் கந்தசாமி
கொக்குவில் மஞ்சவனப்பதி
உசன் கந்தசாமி
வல்லிபுரம் ஆழ்வார்
பொன்னலை வரதராஜப் பெருமாள்
வண்ணை வரதராஜப் பெருமாள்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம்
அச்சுவேலி காட்டுமலை கந்தசாமி ஆலயம்

இப் பட்டியலில் வரும் எல்லாக் கோயில்களும் பிரதேச முக்கியத்துவம் உடையன என்று கூறுவது சிரமமே. அவ்வப்பகுதியினரின் ஆர்வம், செல்வாக்கு என்பன காரணமாகவே இக் குறிப்புக்கள் இடம்பெற்றன என்று சொல்வதிலே தவறு இருத்தல் முடியாது.

இப் பஞ்சாங்கங்களைப் பார்க்கும் பொழுது இன்னெரு முக்கிய சமஸ்கிருத நெறிப் படுகை முறைமை தெரியவரும். அதாவது ஆகம முறைப்படி தொழிற்படும் கோயில் களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்வதைக் காணலாம். முன்னர், பொங் கல், குளுத்தி நடத்தி வந்த கோயில்கள் படிப்படியாக மஹோற்சவக் கோயில்களாக மாறுவதை நாம் அவதானிக்கலாம். உதாரணமாக முன்னர் சங்காபிஷேகக் குறிப்புக் கொண்ட கோயிலாகவிருந்த கரவெட்டி கிழக்கு கிழவித்தோட்டம் பிள்ளையார் கோயில் பின்னர் மஹோற்சவக் கோயிலாக மாறுகின்றது. அதே போன்று முன்னர் பொங்கல் பற்றிய குறிப்பினையே கொண்ட நல்லூர் இலங்கைநாயகி அம்மன் கோயில் இப்போது மஹோற்சவக் கோயிலாக (1970—71) மாறுகின்றது. இந்தப் பண்பினை நாம் யாழ்ப் பாணம் முழுவதிலும் பல இடங்களிற் காணலாம்.

யாழ்ப்பாணத்து சமஸ்கிருதநெறிப்படுகையின் இன்னெரு வெளிப்பாடாக அமை வது, சிறு பாரம்பரியத் தெய்வங்கள் பெரும் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப் படுவதாகும். இதற்கு நல்ல உதாரணங்களாக அமைபவை அம்மன் கோயில்களே. முன்னர் கண்ணகி அம்மன் கோயில்களாகவிருந்த பல கோயில்கள் இப்பொழுது உயர் பாரம்பரியக் கடவுளரின் பெயர்களைக் கொண்ட கோயில்களாகவுள்ளன.

உ—ம் விபவ (1988—90) வருடப் பஞ்சாங்கத்தில் வரும் பின்வரும் குறிப்புக்கள் உள்ளன.

— ''புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி''
— ''புத்தூர் கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி''

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலும் இத்தகைய ஒரு பெயர் மாற்றத்தைப் பெற்றுள்ளது.

சிறு பாரம்பரியத் தெய்வங்களை உயர் மரபுத் தெய்வங்களாகக் கொள்வது ஒரு புறமிருக்க, முன்னர் குறிப்பிட்டபடி, சிறு பாரம்பரிய வழிபாட்டு முறைகளும் (பொங் கல், குளித்தி) உயர் வழிபாட்டு முறைமைகள் ஆகக் கொள்ளப்படுவதை நோக்கத் தவறக் கூடாது.

இவ்வாறு உயர்நிலைப்படுத்தப்படும் பொழுது சில கோயில்கள் உயர்நிலைச் சுட்டினுற் குறிப்பிடப்பெறும் ஒரு பண்பும் உருவாகின்றது. இதற்கான நல்ல உதாரணமாக அமைவது காரைநகர் சிவன் கோயிலாகும். முன்னர் காரைநகர் சிவன் கோயிலாகக் குறிப்பிடப்பெற்ற இக் கோயில் பின்னர் ''ஈழத்துச் சிதம்பரம்'' எனக் குறிப்பிட்ப் பெறுகின்றன. (1980—81)

யாழ்ப்பாணத்துக் கோயில்களை நோக்கும் பொழுது இங்கு பிள்ளையார் கோயில்களே அதிகமாக இருப்பது தெரியவரும். எந்த ஒரு வருடத்துப் பஞ்சாங்கத்தினைப் பார்த்தாலும் இந்த உண்மை தெரியவரும். பிள்ளையார் வணக்கம் இங்கு விவசாயத்துடன் தொடர்புள்ள ஒரு வணக்கமுறைமையாகவே கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் சிவன்கோயில்களின் தொகை குறைவு. விவசாயம் சாராதவர்களும் தமது பரம்பரையான வழிபடு தெய்வங்களுக்கு மேலாகத் தமக்கெனக் கோயில்களை அமைக்கும் பொழுது பிள்ளையார் கோயில்களையே அமைத்துக் கொண்டனர் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலக் கோயில் வளர்ச்சியை நோக்கும் பொழுது அம்மன் கோயில்கள் அதிகமாகிக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். கண்ணகை அம்மன், மாரியம்மன் வழிபாடு அதிகரித்துக் கொண்டு வருகின்றது. பஞ்சாங்கங்களில் வரும் குளிர்ச்சி, பொங்கல் வைபவங்கள் பெரும்பாலும் அம்மன் கோயில்களிலேயே நடைபெறுகின்றன. இவற்றுக்கான பஞ்சாங்க அந்தஸ்துப்பேறு அடிநிலை மக்களின் சமூக மேனிலை அசைவியக்கத்தைச் சுட்டி நிற்கும் ஒன்று என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. அடிநிலை மக்களின் வழிபாட்டு முறைமைகளுக்கு நியமமான சமூக அங்கிகாரம் கிடைக்கும் பொழுது, சிறு பாரம்பரியத் தெய்வங்கள் உயர் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப்படுவது வழக்கமாகும். [இத்தகைய ஒரு நிலையினை தமிழகத்தில் அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்று வரும் மாரியம்மன் வழிபாட்டிலிருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய ஒரு நிலை கி. பி. 13, 14-ம் நூற்றாண்டுகளிலும் ஏற்பட்டதென்பர்.

இந்த சமஸ்கிருதநெறிப்படுகையில் சமூக உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ளல் அவசியம். ஒரு புறத்தே நோக்கும் பொழுது ஒரு வகைப்பட்ட சமய சனநாயகத்தை இப் பண்பு குறிக்குமதே வேளையில், இப் பண்பு இதற்கு முன்னர் சமூகச்செல்வாக்கற்றிருந்த குழுமங்கள் இப்பொழுது சமூகச் செல்வாக்குடையனவாக மேற்கிளம்பியுள்ளன என்பதையும் சுட்டுகின்றது. வெளிநாட்டுழைப்பினூற் கிடைக்கும் பணவருவாய் சமூகத்தில் சகல மட்டங்களிலும் பரவியுள்ள இன்று, சக்தி இந்த வளர்ச்சி காணப்படுவது இயல்பே. பண வருவாய் மாத்திரம் இதற்கான ஊக்க சக்தியாகாது. பண்பாட்டிற் பங்கு கொள்ளும் உத்வேகமும் உயர் பண்பாடு என்று கருதப்படுவதை தம் வயப்படுத்திக் கொள்ளும் ஆர்வமும் இதற்கு ஆதார சுருதியாக அமைகின்றது.

கோயிலோடு சம்பந்தப்பட்டிருத்தல் என்பது அன்றைய ராஜராஜசோழன் முதல் இன்றைய சாதாரண ராசையா வரை சகல தமிழரிடத்தும் காணப்படும் ஓர் அந்தஸ்துணர்வாகும்.

நமது பண்பாடு வலுவாக நிலைத்து நிற்பதற்கு இந்த உணர்வு உதவியுள்ளது. இன்றும் உதவுகின்றது. தொடர்ந்தும் உதவ நமது சமயவிற்பன்னர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

பின்குறிப்பு :- இக் கட்டுரையாக்கத்துக்கு வேண்டிய உசாத்துணையாக அமைந்த பஞ்சாங்கங்களைத் தந்துதவிய வல்வைச் சோதிடர் திரு. செ. உத்தமலிங்கம் அவர்களுக்கு என் நன்றியுரித்தாகுக.

# கணபதி

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்

கணபதி வேத சாரமாகத் திகழும் பிரம ஸ்வரூபி. இவர் கணங்களுக்குத் தலைவன். இதனால் கணபதி என்னும் பெயர் இவருக்கு விசேடமாக உரியதாயிற்று. இருக்குவேதத்தில் இரண்டாவது மண்டலத்தில் இருபத்து மூன்றாவது சூக்தத்தில் முதற் பாடலில் இவர் கணபதி எனக் குறிப்பிடப்படுகிறார். கணங்களுக்கெல்லாம் தலைவன் என்பது இதன் பொருள். சிவபெருமானின் மூத்த மைந்தராகிய இவரை, அரசனாகச் சிறப்பிக்கப்படும் இவரை, கவிகளுக்கெல்லாம் கவியாக அதாவது, கவியரசனாக விளங்கும் இவரை பெரும் புகழ் படைத்தவரை, வேத முதல்வன் என்ற பெருமைக்குப் பாத்திரமான இவரை, அதனால் பிரமணஸ்பதி எனச் சிறப்பிக்கப்படும். இவரை நாங்கள் ஏகுமாறு கூவி அழைக்கின்றோம் என முழங்குகின்றது இவ் வேதப் பாடல். 'கணாநாம்த்வா' எனத் தொடங்கும் இப் பாடலையே, இவ் வேத மந்திரத்தையே, இன்றுவரை கணபதியை வரும்படி வேண்டி ஆவாகனம் செய்வதற்குரிய வேத மந்திரமாக பிரயோகஞ் செய்து வருகின்றோம். இவ்வாறு வேதங்கள் வழிகாட்ட, தொன்று தொட்டு, இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மக்களால் பலமுறை கூவி அழைக்கப்படும் தெய்வம் விநாயகர் ஒருவரேயாகும்.

வேத ஆராய்ச்சியாளர், வேதங்கள் முழுவதையும் கரை கண்டதாகச் சொல்லிக் கொள்ளும் மேனாட்டு ஆராய்ச்சியாளர் வேதங்களில் விநாயகர் குறிப்பிடப்படவில்லை. எனவே அக் காலத்தில் அவ்வழிபாடு நிகழவில்லை என்பர். வேதங்கள் மறை எனப்படுவன. அதன் பொருள் மறைந்து கிடக்கும். அதில் வரும் தெய்வங்களும் மறைந்துறைபவர்களே. அவர் ஆராய்ச்சிக் கப்பாற்பட்டு மறைந்து இருப்பதனால் அவரை வேதங்களில் காணமுடியாது. ஊடுருவி நோக்கும் பொழுதே அகக் கண்கொண்டு உள் நோக்காக நோக்கும் பொழுதே அவர் வேதங்களில் புலனாவார் என்ற உண்மையை உணர்ந்திருப்பின் இவ்வாறு குறிப்பிடும் சந்தர்ப்பம் இவ் வாராய்ச்சியாளருக்கு நேர்ந்திராது.

விநாயகர், வேதங்களிற் குறிப்பிடப்படுவதோடு அமையாது வேதங்களெல்லாவற்றுக்கும் உட் பொருளாக விளங்குபவர். வேதங்களின் சாரமான, குறுகிய வடிவினதான, பிரணவஸ்வரூபி என நூல்கள் கணபதியைப் போற்றுகின்றன. இவர் பிரணவப் பொரு

ளாம் பெருந்தகை. இவ்வைங்கரன் தலைசிறந்த தெய்வம். வேதங்களின் சாரம் பிரணவம். இருக்கு வேதத்தின் சாரமான அகரத்தையும், யசுர் வேதத்தின் சாரமான உகரத்தையும், சாமவேதத்தின் சாரமான மகரத்தையும் ஒன்றிணைக்கும் பொழுது உருவான பிரணவம் வேதங்களின் தேறல். வேதங்கள் அறிவு மயமானவை. அவை அறிவுப் பொக்கிஷம். அவற்றின் சாரமாயமையும் பிரணவப் பொருளாய் விளங்குபவர் விநாயகர். அவர் அறிவுமயமானவர்; ஞானஸ்வரூபி. இதனால் இவர், வேதங்களில் கவிகளுக்கெல்லாம் கவியாக, கவிச் சக்கரவர்த்தியாக குறிப்பிடப்படுகிறார். இவ்வகையான வர்ணனை மேலும் இருக்கு வேதத்தில் 10வது மண்டலத்தில் 191 சூக்தத்தில் 9வது பாடலில் வருகின்றது இவ்வாறு, வேத விழுப்பொருளாக விளங்குவது இவரது வருணனை.

யசுர் வேதமும் கணங்களை முதலில் குறிப்பிட்டு அவர்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டு, பின் அவற்றின் தலைவரான கணபதியைக் குறிப்பிட்டு வணக்கம் தெரிவிக்கின்றது. இவ்வாறு கணங்களுக்குத் தலைவனான பெருமை இவருக்கே உரியது. இதைத் தொடர்ந்து இவருக்கு வி—நாயகன் என்ற பெயர் உருவாயிற்று. விநாயகன் என்பது விசிஷ்டமான, அதாவது சிறந்த, நாயகன் என்ற பொருளைத் தருவது மட்டுமன்றி, விகத நாயகன், தனக்குத் தலைவன் ஒருவன் உளன் என்ற நிலை பிறக்காதவாறு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனாக விளங்குபவன் என்பதையே உணர்த்துகிறது. எல்லோருக்கும் தலைவனாகவும், தனக்குத் தலைவன் அற்றவனாயும் விளங்குபவர் விநாயகப் பெருமானாவார்.

அறிவுக் களஞ்சியமாக விளங்கும் விநாயகப் பெருமானுக்குப் பொருத்தமுறும் வண்ணம் நுண்ணறிவு நிரம்பிய யானை முகம் அமைந்து இவ்வுயர் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. யானை முகம் படைத்த இத் திருவுருவத்திற்குக் கரங்கள் ஐந்து. ஒன்று யானைக்கே சிறப்பாக உரிய துதிக்கை. ஏனைய கரங்கள் பாசம் அங்குசம் ஒடித்த கொம்பு மோதகம் என்பவற்றை ஏந்தி நிற்பன. இத் தெய்வத்தின் வயிறு மிகவும் பெரியது. உலகனைத்தையும் உள்ளடக்கியதாற் போலும், இவன் தொந்தி இவ்வளவு பருத்துத் தொங்க இவன் லம்போதரன் ஆகிறான். வளைந்த தும்பிக்கையோடு இவன் வடிவை உற்றுநோக்கும் பொழுது இவன் பிரணவ வடிவம் பெற்று நிற்பது புலன் ஆகிறது.


இன்னொரு வகையில் விநாயகரின் வடிவை நோக்கும் பொழுது அவர் அன்னை பராசக்தியின் அதியுன்னதமான வடிவைத் தாங்கி நிற்கின்றார் என்று எண்ணத் தூண்டுகின்றது. அம்பிகையின் இவ்வடிவமைப்பில் சிறந்த அம்சங்களும், விநாயகர் அருள் சுரக்கும் பொழுது காணப்படும் பாங்கும் இவ்வாறு சிந்திக்க வைக்கின்றன. அம்பிகையின் தோற்றத்தை அகக் கண்முன் காணும் ஆதி சங்கரர் அதை வருணிக்கிறார். நான்கு கைகளும் படைக் கலங்களைத் தாங்கி நிற்கும் அவ்வுயர் கோலத்தை சௌந்தரியலஹரிப் பாடலில் சித்திரிக்கிறார். பாசம், அங்குசம் கருப்பம்வில் பஞ்சபாணங்கள் ஆகியவற்றை ஏந்தி நிற்கும் அம்பிகைக்கு அபய வரத முத்திரைகளைக் காட்டி நிற்கும் வாய்ப்பு அறவே இல்லை. இவ்வாறு காணும் சங்கரர் ''அம்பிகையே, அபயம் வரதம் இரண்டையும் இரு கரங்களால் காட்டும் நிலையில் காணப்படாத நீ பக்தர் வேண்டும் வரங்களைக் கொடுப்பதில்லையா? அவர்களைப் பயத்தினின்றும் காப்பாற்றுவதில்லையா?'' என வினவி விடையையும் தருகிறார். ''உன் காலடியிணைகளில் விழுந்து வணங்குபவர்களுக்கு அபயமளிப்பதிலும் அவர் வேண்டுவதைக் காட்டிலும் அதிகமாக வழங்குவதிலும் அதி சாமர்த்தியம் படைத்தவை அம்பிகையின் திருவடிகள்'' என்கிறார். இவ்வாறே திருவடியிணையால் அருளும் பெற்றி விநாயகப் பெருமானுக்கு உண்டு என்பதை ஔவையார் பாடல் ஒன்றில் அழகாகக் குறிப்பிடுகிறார். தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு, 'வாக்குண்டாம்' என்றும் 'மாமலராள் நோக்குண்டாம்' என்றும், 'மேனி நுடங்காது' என்றும் குறிப்பிடுமவர் இவ்வாறு கணபதியை வழிபடுபவர்களுக்கு

சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கையாகிய மூன்று சக்திகளின் அநுக்கிரகம் கிடைக்கும் என உணர்ந்துகிருர். இதில் சக்தியின் அருளால் கிட்டவேண்டிய மூன்று பேறுகளையும் அளிக்கும் ஆற்றல் விநாயகரின் திருவடிக்குண்டு என்பது புலனுகின்றது. பாராசக்தியின் அம்சங்கள் மூன்றும் திருவுருவப் பொலிவில் சுவறினல் மட்டுமே இவ்வாறு அளிக்க முடியும் என்ற ஐயம் எழும் பொழுது ''தவம் சக்தி திரயாத்மக'': ''நீ மூன்று சக்திகளையும் கொண்டமையும் வடிவுடையவன்'' என்ற சுருதி வாக்கியம் சந்தேகத்தை நீக்கித் தெளிவைப் பிறப்பிக்கின்றது. இம் மூன்று சக்திகளும் பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவரின் சக்திகளே. எனவே விநாயகப் பெருமான் மூவர் நிகழ்த்தும் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களுக்கு உரியவராய் விளங்குகிருர் என்பது பெறப்படுகின்றது இது தவிர அம்பிகை தாங்கி நிற்கும் பாசம் அங்குசம் ஆகிய படைக்கலங்களை விநாயகரும் ஏந்தி நிற்கும் நிலை இருவருக்கும் இடையே உள்ள ஒற்றுமையை உணர்த்தி நிற்கின்றது. இதன் காரணமாக, பராசக்தியிடம் சிவபெருமானுடன் கலந்த காரணத்தால் சிவபெருமானிடமிருந்து சுவறிய முக்கண்கள் வளைந்த பிறை பொருந்திய மகுடம் சிவந்த நிறம் ஆகியன விநாயகரிடத்தும் பொருந்தி விளங்கக் காண்கிருேம்.

இவர் பிள்ளையார். பிள்ளையாராகவே என்றும் இருப்பவர். இவரது வடிவம் குழந்தை வடிவம். அதுவும் உலகுக்கு அம்மையப்பரான சிவபெருமான் உமாதேவியார் ஆகிய இருவரின் குழந்தை. குழந்தையுடன் நெருங்கிப் பழகுவது எளிது. குழந்தையுடன் நெருங்கிப் பழகிவிட்டாலே, அக் குழந்தை மூலம் அதன் அப்பா அம்மா இருவரையும் அணுகுவது இன்னும் எளிது. எனவே விநாயக வழிபாட்டின் மூலம் சிவசக்தி வழிபாட்டுக்கு உரியவர்களாக எளிதில் ஆகலாம்.

இந்து மதத் தெய்வங்கள். யாவற்றுள்ளும் பெருமளவினரால் உபாசிக்கப்படும் பெருமை இவருக்கு உண்டு. சைவர்களாயினும் சாக்தர்களாயினும் வைணவ சௌர மதத்தினராயினும் இவருக்கு முதலில் தம் வணக்கத்தையும் வழிபாட்டையும் செலுத்தி இடையூறுகள் நீங்கப் பெற்றவராக தத்தம் தெய்வங்களை வழிபட முற்படுவர். வைணவர்கள் கூட இவரை வழிபட்டே தம் தெய்வமாகிய விஷ்ணுவை வழிபடுவர். அவர்களிடையே இவர் தும்பிக்கையாழ்வார் எனப் பிரசித்தி பெறுகிருர். இவ்வாறு இந்து மதத்தின் பல்வேறு வகையினரும் முதலில் வழிபடும் தெய்வமாக மட்டும் அமையாது அவர்கள் பல முறைகள் வழிபடுந் தெய்வமாகவும் விளங்கி வருகிருர். தொடங்குங் காரியங்கள் அனைத்தும் இடையூறு எதுவுமின்றி இனிது நிறைவேற எல்லாரும் இவரருளையே வேண்டி நிற்கின்றனர். எக் கருமத்தைத் தொடங்குபவரும் விநாயகரை முதலில் வழிபட்டே தொடங்குவது மரபு. இதனுல் விக்கினேசுவரர், விக்நராஜர் என்ற சிறப்புப் பெயர்கள் இவருக்குண்டாயின. விக்கினங்களுக்குத் தலைவர் என்ற பொருள் படும் இப் பெயர்கள், இவர் காரியங்களைத் தம்மைப் பணிந்து தொடங்குபவருக்கு நேரிடும் இடையூறுகளை நீக்குபவர் என்பதை மட்டுமன்றி இறுமாப்புடன் தம்மைப் பணியாது கருமமாற்றுபவர்க்கு இடையூறுகளை உண்டுபண்ணுபவர் என்றும் கருத்தையும் உணர்த்தி நிற்கும்.

விநாயகரை மஞ்சள் மாவால் உருவாக்கிய வடிவத்தில் அவ் அவ் வேளை அமைத்து ஆவாகித்து வழிபடுவது வழக்கம். இவ்வாறு நிரந்தரமான வழிபாடு இல்லாது தேவைக்கேற்ப அவ் வவ் வேளைகளில் நடைபெறும் வழிபாடுகளில் அவர் சாந்நித்தியமாக எழுந்தருளியிருக்கும் கால எல்லை மிகக் குறுகியது. அவரை இவ்வாறு எழுந்தருளச் செய்து அவர் முந்நிலையில் அவரைச் சாட்சியாகக் கொண்டு நிகழ இருக்கும் வழிபாட்டையோ கிரிகைகளையோ செய்வதாக சங்கற்பித்து, சங்கற்பம் முடிந்ததும் அவரை வந்தவாறு திரும்பிப் போகும் படி வேண்டி உத்வாசனம் செய்வர். உத்வாசனம் என்முல் அங்கு தொடர்ந்து உறையாது வந்தவாறு செல்லும்படி வேண்டுதல் என்று பொருள். எனவே, எல்லாக் கருமங்களுக்கும் இவர் சாட்சியாக விளங்குகிருர். அவரைப் பலர்



கும்பாபிஷேக வைபவத்தில் சுவாமி வீதிவலம் புறப்படு முன்னர் எழுந்தருளி மூர்த்திக்கு சிவஸ்ரீ: சதா யோகீஸ்வரக் குருக்கள் தீபாராதனை நிகழ்த்துகின்றார்



கும்பாபிஷேக தினத்தன்று ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ. நா: சண்முகரத்தினக் குருக்கள் ஆசியுரை வழங்குகின்றார். கும்பாபிஷேக சிவாசாரியர்கள் அமர்ந்திருக்கின்றனர்

வேண்டியமைப்பதாலும் பலர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டி இருத்தலாலும் இவ்வாறு நாமதியாது அவரைப் போகவிடுப்பதே இக் கிரியையின் உட் தத்துவம்.

சிவபெருமானின் மைந்தர்களான கணபதி, குமரன் இருவருமே பெருந் தலைவர்கள். மூத்தவர் கணபதி; கணங்களுக்குத் தலைவர். இளையவர் குமரன், தேவ சேனைக்குத் தலைவன்; தேவசேனபதி இருவர் தோற்றியதன் நோக்கம் அசுரர்களால் துன்புறுத்தப்படும் தேவர்கள் துயர்களைதலே. ஒருவர் கயமுகசுரனை யழித்தார். மற்றவர் சூரனைத் தடிந்தார். கயமுகாசுரனை யழித்த பொழுது எலி வடிவம் பெற்ற அவ்வசுரன் இவர் வாகனமாயினன் தான் அழிந்ததும் மயில் வடிவு பெற்ற சூரன் முருகனின் வாகனமாக விளங்கி வருகிறான். அழியாவரம் பெற்ற அரக்கர்கள் இருவரும் இவ்விரு தெய்வங்களைச் சுமக்கும் பேறுபெற்றுத் திருவருளுக்குப் பாத்திரமாயினர்.

கணபதியின் பெருமையை கணபதி அதர்வசிர உபநிடதம் எடுத்துக் கூறுகிறது. அவர் வடிவம் அவரின் வழிபாட்டிற்குரிய மந்திரங்கள், வழி முறைகள் வழிபாட்டின் வகைவகையான பெறுபேறுகள் பற்றி இவ்வுபநிடதம் கூறுவதின் சாரம் பரம்பொருளாகிய பிரமத்தின் மறு வடிவம் கணபதி என்பதே. சகுண நிலையில் கணபதி என்றும் நிற்குண நிலையில் பிரமம் என்றும் விளக்கம் பெறும் பரம்பொருளே கணபதி என்பது இவ்வுபநிடதம் கூறும் உண்மை.

கணபதியே கண்கண்ட உயர் தத்துவப் பொருளாய் விளங்குபவர் அவர் எல்லாவற்றையும் ஆக்குபவர், அளிப்பவர் அழிப்பவர் பிரமசு வருமாக விளங்குபவர். ஆத்ம ஸ்வரூபத்தைத் தாங்கி நிற்பவரும் அவரே. பின், முன், வலம், இடம், மேல் கீழ் ஆகிய எல்லாப் பக்கங்களின்றும் எம்மைச் காப்பவர் கணபதி. இவர் சொல்லாலமையும் சப்த பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து நிற்பவர். சச்சிதானந்த வடிவம் தாங்கி வேறு ஒன்றும் இல்லாதவாறு தானே தனிப் பொருளாய் அமையும் ஒப்பற்ற பெருமை இவரது ஆகும். இவர் எம் கண்முன் தோற்றம்பெறும் பிரம்மம் ஞான மயமாக விளங்குபவரும் இவரே பிரபஞ்சம் முழுவதும் இவரிடத்து தோன்றிற்று. இவை அனைத்தும் இவரை அண்டியே நிலைபெற்று நிற்பன. இவை யாவும் இவரிடமே ஒடுங்குகின்றன. இவர் நிலம், நீர், வாயு, தீ, விசும்பு ஆகிய பஞ்ச பூத வடிவங் கொண்டவர். மேலும் இவர் பரை பஸ்யந்தி மத்யமை, வைகரி என்ற வாக்கின் நான்கு நிலைகளாக விளங்குபவர். சத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களுக்கு அதீதமானவர். இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய மூன்று காலங்களையும் கடந்தவர். இவர் விசேடமாக உறைவது ஆறு ஆதாரங்களுக்கும் அடித்தளமாக விளங்கும் மூலாதாரத்திலாகும். மூன்று சக்திகளையும் தன் அமிசங்களாகக் கொண்டவர். இவரை யோகிகள் என்றும் தியானித்து வணங்குவர். இவரே பிரமன்; இவரே விஷ்ணு; இவரே சிவன், இந்திரன் அக்நி, வாயு, சூரியன், சந்திரன் ஆகிய தெய்வங்களும் இவரே. இவர் பிரமம் எனப்படுவர்.

இவரது மூலமந்திரம் அமையுமாற்றை எடுத்து விரிக்கும் கணபதி உபநிடதம் தொடர்ந்து இவரது சகுண அமைப்புப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஒற்றைக் கொம்பைத் தாங்கி நிற்கும் இத் தெய்வத்துக்கு நான்கு கரங்கள் உண்டு என உப நிடதம் கூறும். அவற்றில் பாசம் அங்குசம் தாங்கிய கரங்கள் இரண்டு. இன்னொரு கையில் விளங்குவது ஒடித்த கொம்பு. மற்றக்கை வரத ஹஸ்தமாக இருப்பதையே இவ்வுபநிடதம் குறிக்கின்றது. ஆனால் விநாயகரின் விக்கிரகங்கள் எல்லாம் வரதகரமாயமைய வேண்டிய இக்கை மோதகம் ஏந்தி நிற்பதையே சித்திரிக்கின்றன. இது இவரருள் இனிமையாக இருப்பதையே குறித்து நிற்கும். இவரது மேனி சிவந்த நிறம் பொருந்தியது வயிறு மிகவும் பருத்தது காது சுளகு போன்றது. இவர் உடுப்பது சிவந்த ஆடை. செஞ்சந்தனப் பூச்சும் சிவந்த

மலர்களும் இவரை அணி செய்கின்றன. பக்தர்களிடம் இவர் பெருங் கருணை பூண்டவர். இவர் உயர்ந்த நிலையில் என்றும் நிலைத்து நிற்பவர் ஆகவே, அச்யுதர் எனப்படுவர். புருஷன் பிரகிருதி என்ற (சாங்கியங் கூறும்) உயர் தத்துவங்களைக் கடந்து, சிருஷ்டி நிகழ முன் வெளிப்பட்டுத் தோற்றியருளியவர். இவ்வாறு இவரை மனத்திலிருத்தி தியானிப்பவர் தலை சிறந்த யோகி. இப்படி கணபதியை அதர்வசிர உபநிடதம் விளக்குகின்றது.

கணபதி உபநிடதமே பெரும் மந்திரமாக அமைந்து விடுகிறது: இதை ஜபித்துக் கொண்டே கணபதியை அபிடேகித்து அவரை மகிழ்விப்பவன் நாவன்மைபடைத்தவன் ஆவான். உணவைத்துறந்து உபவாசமிருந்து ஜபிப்பவன் வித்தைகளில் வல்லவனாவான். உபாசிப்பவனுக்குப் பயம் எதுவும் ஏற்படாது. இம்மந்திரங்களால் அறுகம் புல்கொண்டு அருட்சிப்பவர் குபேரனுக்கு நிகராக பெரும் செல்வம் படைத்தவனாக விளங்குவன். நெற்பொரிகளால் ஆகுதிகள் கொடுப்பவன் பெரும் புகழ் அடைவான்; மேதையாக விளங்குபவன்; ஆயிரம் மோதகங்களை அவியாகச் சொரிந்து வேட்பவன் தான் விரும்பும் பேற்றைப் பெறுவன். நெய், சமித்து ஆகியவற்றால் ஆகுதி கொடுப்பவன் வேண்டும் அபிலாஷைகளை அடைவன்; குற்றங்கள், பாபங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுபவன் எல்லாம் அறிந்தவனாகவும் ஆவான், இவ்வாறு கணபதி அதர்வசிர உபநிடதம் கூறும்.

தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு பல சிறப்பமிசங்கள் கொண்டு விளங்கும், இவ்வகையில் விநாயக வழிபாடு பிரசித்தி பெற்றவாறு வேறெங்கணும் பிரசித்தி பெறவில்லை எனலாம். இங்கு விநாயகர், அரசமரத்தடியில், ஆற்றங்கரையில், நாற்சந்திகளில் திறந்தவெளியில்கூட வகையாக எழுந்தருளியிருக்கிறார். எப்போதும் எவருக்கும் கிட்டக்கூடிய தெய்வமாக விளங்குவதே இவர் சிறப்பு. மழை வெய்யில் இரண்டையும் பொருட்படுதாதவாறு எழுந்தருளி வேண்டுவார் வேண்டுபவற்றை அருளிக்கொண்டேயிருக்கிறார். இங்கு, தாம் மனதில் நினைத்தகாரியம் நிறைவேறியதும் அடியவர், கூட்டமாகச்சென்று தேங்காய்களைச் சிதற அடித்தும் அப்பம், அவல், பொரி, எள்ளுருண்டை முதலிய நிவேதனப் பொருட்களை நிவேதித்தும் வழிபடுவர். அவரை வணங்கும் வேளை அவர் முன்னிலையில் நின்று இருகைகளாலும் தங்கள் தலைகளில் குட்டித் தோப்புக்கரணம் போட்டு வழிபடும் மரபு தமிழ்நாட்டுக்கேயுரியது. கயமுகனுக்கு நிர்ப்பந்தத்தின் பேரில் செய்து வந்த இந்த மரியாதையை, அவனிறந்தொழிந்ததும், அவன் அழிவுக்குக்காரணமான விநாயகருக்கே செய்து வருவதாக புராண வரலாறு கூறும்.

கணபதி ஹோமம் என்பது பாரத நாடெங்கணும் பரந்து கடைப்பிடிக்கப்படும் வழிபடுமுறை. அக்கினி வளர்த்து அதில், விநாயகரை எழுந்தருளுவித்து, எட்டுப்பொருள்களால் ஆகுதிகள் நிகழும். மோதகம், அவல், பொரி, சத்துமா, கரும்பு தேங்காய், எள்ளுருண்டை, வாழைப்பழம் என்பன் இவ்வெட்டுப் பொருள்கள்.

தென்பாரதத்திற் போன்று வெய்யில் மழை இரண்டையும் பொருட்படுத்தாதவாறு பொது இடங்களில் நின்று அருளும் அவலநிலை விநாயகருக்கு இலங்கையில் அறவே இல்லை. இங்கு விநாயகர் ஆலயங்கள் எண்ணில. எல்லா விநாயகர் ஆலயங்களும் அவ்வச் சூழ் நிலைக்கும் வசதிக்கும் ஏற்ப அழகிய சிறு கோயில்களாயமைந்து விளங்குவன. இவை விநாயகப் பெருமானை நிறைவுறப் பிரதிஷ்டித்து வழிபடும் தனி ஆலயங்களாகவும், நித்திய நைமித்திகங்கள் சிறப்புற நிகழும் சிறந்த தலங்களாகவும் திகழ்வன. பெரும்பாலானவை துவஜாரோகணம், தேர் தீர்த்தம் முதலிய நிகழும் முழுமைபெற்ற ஆலயங்களாகவும் விளங்குவது கண்கூடு. விக்நேசுவரன் அருள் கிட்டினால் குறைவு எதுவுமின்றிச் சிறப்புற வாழலாம்.

ஆதிசங்கரர் இயற்றிய கணேச பஞ்சரத்னம் பின்வருமாறு விநாயகரைப் போற்றுகிறது:

''இத்தெய்வத்தின் கையில் மோதகம் இருக்கிறது. தன்னை அண்டியவர்களுக்கு இவர் மோக்ஷத்தை அருளுகிறார்; சந்திரனது பிறையைச் சூடியுள்ளார். உலகத்தைக் காத்து நிற்பவர்; தனக்குத் தலைவனின்றி தானே தலைவராக விளங்குபவர்; கயமுகனை அழித்தவர்; தன்னை வழிபடுவருக்கு விரைவில் பலனளிக்கின்றார்''.

''தன்னை வணங்காதவருக்கு பயத்தைக் கொடுக்கிறார். உதிக்கும் இளஞ் சூரியவின் கிரணங்களையுடையவர்; தன்னை வணங்குபவரை ஆபத்தில் இருந்து காப்பவர்; பக்தர்களின் பொக்கிஷம். சிறந்த யானைவடிவுடையவர். பிரமத கணங்களின் தலைவர். ஒப்பற்ற தலைவன்!!

''இவர் எல்லா உலகங்களுக்கும் நன்மை பயப்பவர்; கயமுகனைச் சங்கரித்தவர் சகல உலகங்களையும் தன் வயிற்றுள் வைத்துக்காப்பாற்றுவதனால் பெருத்த வயிறுபடைத்தவர். சிறந்த யானைமுகத்தை உடையவர். கருணைபுரிபவர்; பொறுமை மிக்கவர்; சந்தோஷத்தைப் பெருக்குபவர்; புகழைத்தருபவர்''

''தன்னை வழிபடுபவரின் பீடைகளை ஒழிப்பவர். ஆனுறியான வேதவாக்கியங்களால் துதிக்கப்படும் பெருமையுடையவர்; முப்புரங்களையழித்த சிவபெருமானின் புதல்வர்''.

''மிக அழகிய சாந்தி வீசும் பற்களின் சோபையை யுடையவர். யமனுக்கும்யமனான பரமேசுவரனின் புத்திரன். மனதினாலும் நினைக்கமுடியாத சக்தியுடையவர். பக்தர்களின்சகல விக்கினங்களையும் அழிப்பவர், யோகிகளுடைய இருதயத்தில் நிரந்தரமாக வசிப்பவர். ஒப்பற்ற ஒற்றைக் கொம்பையுடைய விநாயகர் ஒருவரையே இடையறாது சிந்திக்கிறேன்''

ஆதிசங்கரர் ஐந்து பாடல்களில் இவ்வாறு விநாயகரைத்துதித்துப் போற்றுகிறார்.

## விநாயகர் திருவுருவம்

உலைம

திருவருளே திருமேனியாக உள்ளவர் விநர்யகன், சர்வவல்லபரான சிவனிடமிருந்து முதன்முதலாக எழுந்த ஒலியான ''ஓம்'' என்னும் வரிவடிவமே விநாயகனின் திருவுருவமாகும், யானை முகமும் மூன்று கண்களும், இரண்டு விசாலமான செவிகளும் ஒற்றைக் கொம்பும், ஐந்து கரங்களும் தொந்தி (பெரிய) வயிறும், இரண்டு குறுகிய வடிவமான திருவடிகளும் (பாதங்கள்) விநாயகரது திருவுருவங்களாகும். யானைமுகம் பிரணவ வடிவினன் என்பதையும் மூன்று கண்கள் சூரிய, சந்திர, அக்கினிகளையும், ஐந்து கரங்களும் தானே ஐந்து கிருத்தியங்களையும் செய்பவன் என்பதையும் இரண்டு விசாலமான செவிகளும் ஆன்மாக்களை மலவாதனை தாக்காது காத்து வினைவெப்பத்தை போக்கியருளும் என்பதையும் தொந்தி வயிறு எல்லா அண்டங்களும் உயிர்களும் தனக்குள்ளேயே அடங்கியுள்ளன என்பதையுப் உணர்த்துகின்றன.

# கோயில் வரலாற்றுக் குறிப்புகள்

எஸ். திருச்செல்வம்

ஈழவள நாட்டின் சிரம் போல் விளங்குவது யாழ்ப்பாணம். தமிழ்ப்பெருங்குடி மக்களின் தானைத் தாயகமான தமிழ்நாட்டிலிருந்து வந்த யாழ்பாடியின் பாடலால் பெருமை பெற்றது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் சிகரம் போன்று துலங்குவது நல்லூர். ஈழத்தின் திருத்தலங்களில் ஒன்றாக, நல்லாரும், வல்லாரும் தினந்தோறும் வணங்கும் பெரும் தலங்களில் ஒன்றாக பொலிந்து விளங்குவதும் நல்லூரே.

நல்லூரின் வடக்கே, பெயர் பெற்றுத்துலங்கும் தலம் திருநெல்வேலி, பல நூற்றாண்டுகட்கு முன்னர் தமிழ்நாட்டின் திருநெல்வேலி என்ற இடத்திலிருந்து வந்தவர்கள் இங்கு குடியேறிய காரணத்தால், இவ்விடமும் திருநெல்வேலி என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்டு வருவதாக பேச்சு வழக்கில் கூறப்பட்டு வருகிறது.

திரு+நல்+வேலி என்பதே காலக்கிரமத்தில் திருநெல்வேலி என்று அழைக்க ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ''திரு'' என்றால் அருள், செல்வம் என்று பொருள். ''நல்'' என்றால் நல்லவர்கள் என்றும், நல்ல தெய்வங்கள் என்றும், ''வேலி'' என்றால் இடம், தலம் என்றும் பொருள்படும். அருளும் செல்வமும் வாரி வழங்கும் நல்ல பல தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் தலம் என்பதாலும், அருளும் செல்வமும் நிறைந்த நல்லவர்கள் வாழும் இடம் என்பதாலும், இத்தலம் திருநெல்வேலி என்று அழைக்கப்படலாயிற்று.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது சான்றோர் வாக்கு. மூழத்துக்கு ஒரு கோயிலைக்கொண்ட புண்ணிய தலம் திருநெல்வேலி. இச்சிறு கிராமத்தின் எத்திசை பார்க்கினும் கோயில்களே. இத்தனை அருள் நிறைந்த இத்திருத் தலத்தையே காத்து, அருள்பாலிப்பவன் தலங்காவலான். இதனாலேயே இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை ''தலங்காவற் பிள்ளையார்'' என்று பக்தர்கள் அழைத்து வருகின்றனர்.

தந்தை தாயாராகிய சிவனுக்கும், அம்மைக்கும், மூத்த மைந்தனாகிய விநாயகனுக்கும், அருகருகே அழகாகக் கோயில் கட்டி, விழாச் செய்து மகிழ்பவர்கள் திருநெல்வேலி மக்கள். இதனால் நல்ல தெய்வங்களின் அருளும், ஆசியும் பெற்றவர்கள் இங்கு வாழ்வதாலும் இத்தலம் திருநெல்வேலி என அழைக்கப்படுவது பொருத்தமானதே.

இவ்வாறு எல்லா நலனுடனும், பலனுடனும் புகழ்பெற்ற திருநெல்வேலிப் பதியில் நடு நாயகமாக விளங்குவது தலங்காவற் பிள்ளையார் கோயில். இக்கோயிலின் வரலாறு தனித்துவமானது. தொன்மையானதுங்கூட. தலத்தையே காவல் செய்யும் விநாயகன் என்று பெயர் பூண்ட விநாயகன் என்றால் சொல்லவும் வேண்டுமா?

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, ஈழத்தின் பல பாகங்களிலும் கூட பல நூற்றுக் கணக்கான விநாயகர் ஆலயங்கள் இருக்கின்றபோதிலும் இக் கோயிலின் அமைப்பு ஓர் தனித்துவத்தன்மை பெற்றது என்பதை இதனை அணுகி ஆராய்ந்தால் மட்டும் புரியும். நாரதன் ஆரம்பித்துவைத்த மாம்பழச் சண்டையின்போதும்கூட தந்தை தாயையே உலகம் என்று சுற்றிவந்து, மாம்பழம் பெற்று, அவர்கள் அருகிலேயே மூத்த பிள்ளை யாகவும், செல்லப்பிள்ளையாகவும் அமர்ந்துகொண்டவனல்லவா விநாயகன்?

இங்கும்கூட, திருநெல்வேலி சிவன், முத்துமாரி அம்மன் ஆலயங்களுக்கருகிலேயே தனக்கும் கோயில் அமைத்து எழுந்தருளி தனது உரிமையை நிலைநாட்டி, திருநெல் வேலித் தலத்தையே ஆட்சிபுரிகின்றானே! தாயாராகிய உமை அம்மையின் உரிமைப் பிள்ளை தானே என்பதை நிலைநாட்ட, தன்னைச்சுற்றி அரசடி அம்மன், வாலை அம்மன், முத்துமாரி அம்மன் என்ற மூன்று ஆலயங்களை வட, கிழ், மேற்றிசைகளில் அமைத்து அவற்றின் நடுநாயகமாக நின்று திருநெல்வேலித் தலத்தையே காவல்செய்யும் தலங்கா வலான் பெருமையை, அழகை, ஆட்சிச்சிறப்பை எவ்வாறு புகழ்வது? காணக்கண்ணாயி ரம் மட்டும் இருந்தால் போதாது பல்லாயிரம் கண்கள் வேண்டுமே இந்த ஆனந்த அழகை அள்ளிப்பருக!

சிவனின் மூத்த குமாரர், விநாயகர். விநாயகர் என்றால் தனக்குமேல் ஒரு தலை வர் இல்லாதவர் என்பது பொருள். சிவனும் விநாயகரும் ஒருவரே. தேவர்களின் துயர் துடைக்க விநாயகன் பிரணவத்தினின்றும் தோன்றினார் என்பது வரலாறு. இவ ரது திருமேனி ஞானமயமானது. இடர்களைப் போக்குபவன, விக்கினங்களை நீக்குபவ னதலால், விநாயகன் முதலில் வழிபடுவதற்குரியவன் என்பது சமயாசாரியர், சந்தனு சாரியர்களது வாக்கு.

கயமுகாசுரனின் துன்பத்தால் வருந்திய தேவர்கள், திருக்கைலை மலைக்குச்சென்று தங்கள் துன்பத்தை நீக்கி அருளுமாறு சிவனை வேண்டினர். சிவன் பார்வதி சமேத ராய் நந்தவனத்துக்குச் சென்று, அங்குள்ள சித்திர மண்டபத்தில் எழுந்தருளி சித்திரங் களை நோக்கினர். சித்திரங்களில் ஒன்றாயிருந்த சிவசக்தி பிரணவம், சிவனது திருவரு ளால், ஆண்டவன் எழுத்தாகிய ''அகரம்!' ஆண்யானையாகவும், அம்மை எழுத்தாகிய ''உகரம்'' பெண் யானையாகவும் காட்சியளிக்க, அங்கு யானை முகத்துடன் கூடிய விநா யகப்பெருமான் திருஅவதாரம் செய்தார்.

சிவனின் சிரேஷ்ட புதல்வனான விநாயகன், திருநெல்வேலி தலங்காவலில் குடி கொண்டிருக்கும் வரலாறு பழமையானது; தொன்மையானது. இங்கு கோயில் கொண் டிருக்கும் நிலத்தை ஐந்து, ஆறு தலைமுறைகளுக்கு முன்னர் பூசகர் ஒருவர் தாமே பணம் கொடுத்து வாங்கி, சிறு கோயில் கட்டி பிள்ளையாரை தினமும் அர்ச்சித்து வந் தார். ஆதியில் இங்கு கோயில் கொண்டருளிய பிள்ளையாரை மக்கள் சிலை வடிவிலே பூஜித்து வந்தனர். இச்சிலையை அடுத்து ஓர் அழிஞ்சில் மரம் இருந்தமையால், அடி யார்கள் அழிஞ்சிலடிப் பிள்ளையார் என்று இம் மூர்த்தியைப் போற்றி வழிபட்டுவந்தனர்.

இவ்வாலயத்தை, யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் இராசாக்கள் (மன்னர்கள்) நன்கு ஆதரித்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. காலக்கிரமத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகரன் என்னும் மன்னர் நல்லூரைத் தனது ராஜதானியாக அமைத்து ஆட்சி நடாத்திவந்தபோது தனது வழி பாட்டுக்காக நல்லைநாத சுவாமி கோயிலை ஜமுனாரிக்கு அருகில் அமைத்தான். இக் கோயில் இப்போது நல்லூர் சட்டநாதர் சுவாமி கோயில் என அழைக்கப்படுகின்றது.

பரராஜசேகரன் தனது குலதெய்வமான நல்லைநாத சுவாமிக்கு காவற்தெய்வங்களாக நான்கு திசைகளிலும் நான்கு பிள்ளையார் கோயில்களை அமைத்தான். தலங்காவற் பிள்ளையார் கைலாச பிள்ளையார், வெயில் விழுந்த பிள்ளையார் பரராஜசேகரப் பிள்ளையார் ஆகியவை இவை நான்குமாகும்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலின் தெற்கே காயாரோகணசிவன் என அழைக்கப்படும் திருநெல்வேலிச் சிவன் கோயிலும், கிழக்கே காயாரோகண பூதராயர் கோயிலும் இருக்கின்றன. இதனால் தலங்காவற்பிள்ளையார் ஒரு காலத்தில் காயாரோகண மூத்த நயினார் கோயில் (சிவனின் மூத்த குமாரன்) என அழைக்கப்பட்டதாக வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன, காலக்கிரமத்தில், திருநெல்வேலி என்னும் இப்பதியை இங்கு எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் காவல்புரிந்து வருவதால் தலங்காவற் பிள்ளையார் என்று அழைக்கப்படலாயினர்.

முற்காலத்தில் இவ்வாலயம் கிழக்கிலும் மேற்கிலும் வாசல் உள்ளதாக இருந்தது. பிள்ளையார் அடியார்களின் கனவில் காட்சி கொடுத்தருளி, கிழக்கு வாசலை மூடி மேற்கு வாசலை மாத்திரம் பாவிக்குமாறு கட்டளையிட்டதற்கிணங்கவே கிழக்கு வாசல் மூடப்பட்டு, மேற்கு வாசல் உபயோகிக்கப்பட்டது. இன்றும், மேற்கு வாசலுடனேயே கோபுரம் அமைந்துள்ளது. ஒருபுறத்தே மணிக்கோபுரமும், மறுபுறத்தே அன்னதான மண்டபமுமாக ஆலய வாசல் திகழ்கிறது. ஆலயத்தின் முகப்புக்கோபுரம் சுமார் நூற்றி ஆறு வருடத்தொன்மையானது. (இவ்வாலயத்தின் 1840 ஆம் ஆண்டுச் சாசனத்திலிருந்து சில குறிப்புகள் எடுக்கப்பட்டன)

ஒவ்வொருவருடமும் ஆனி மாதத்துச் சதய நட்சத்திரத்திலன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்வண்ணம் அதற்குப் பதினைந்து தினங்கட்கு முன்னர் கொடியேற்றம் நடைபெறும். ஆரம்பத்தில் பத்துத் தினங்களுக்கு மட்டுமே திருவிழா நடைபெற்றது. 1973 ஆம் ஆண்டு முதல் அடியார்களின் வேண்டுதலுக்கிணங்க திருவிழாக்களின் தொகை பதினைந்தாக அதிகரிக்கப்பட்டது. திருவிழாவின்போது வசந்தமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் உள்வீதியும், வெளிவீதியும் உலாவருவார். அநேகமான திருவிழாக்களின் போதும் சுவாமியை வாகனத்தில் ஏற்றி, குடை, கொடி, ஆலவட்டம் தீப்பந்தம் ஆகியவை ஏந்திய வண்ணம் அடியார்கள் தங்கள் தோளில் சுமந்து வீதி உலா வருவது முக்கிய அம்சமாகும், சுவாமி வெளிவீதி வரும்போது பல அடியார்கள் வீட்டுவாசலிலும் மண்டகப்படி வைத்து, பூசையும் நிவேதனமும் செய்யப்படும். வருடாந்தம் நடைபெறும் பதினைந்து திருவிழாக்களிலும் ஏழாம் நாளன்று இரவு தண்டிகை உற்சவமும், பத்தாம்நாளன்று சப்பற மஞ்ச உற்சவமும், பதின்மூன்றாம் நாளன்று இரவு சப்பற உற்சவமும், பதினான்காம் நாளன்று மாலை ரத உற்சவமும், பதினைந்தாம் நாளன்று தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

இக்கோயிலுக்கான தேர் அடியார்களின் உதவியுடன் 1942 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது இறையடி எய்திய நாகலிங்க ஆச்சாரியார் அவர்களின் கைவண்ணத்தில் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் உருவான செயற்தேர், இவ்வாலயத்திற்கு மேலும் கெம்பீரத்தைக் கொடுக்கின்றது. இத்தேரின் வெள்ளோட்டம் இன்றைக்குச் சரியாக நாற்பது ஆண்டுகட்கு முன்னர் (17-6-1942) நடைபெற்றது.

தேர்த்திருவிழாவன்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்குதலும், தேர் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, ஆலயவாசலுக்கு வரும்போது சிதறு தேங்காய் அடித்தலும் இன்றும் நடைபெற்று வருகின்றது. தேர்வெள்ளோட்டம் நடைபெற்றதற்கும் ஆலய வாசலில் இருக்கும் கிணற்றுக்கும்கூட ஒற்றுமையுண்டு இக்கிணற்றுநீர் உவர்ப்பாகவே என்றும் இருந்தது. இதனால் அடியார்கள் இந்நீரை கை, கால் அலம்பவும், நிவேதனப் பொருட்களை சுத்தம் செய்யவும் மட்டுமே பாவித்து வந்தனர். ஆனால் வெள்ளோட்டம்

நடைபெற்ற நாளிலிருந்து இக்கிணற்று நீர், உவர்த்தன்மை நீங்கி தேவ அமிர்தம் போன்று மாறியது இன்றும் கோயிலை அண்மித்து இருக்கும் கிணறுகளில் நீர் உவப்பாக இருக்க இக்கிணற்றின் நீர் மட்டுமே தனிச்சுவை நிரம்பியதாகவுள்ளதால், இதனையே பல அடியார்கள் தம் வீட்டுப்பாவனைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

கோவிலின் தெற்கு மூலையில் அரச மரத்தின் கீழுள்ள வைரவர் விக்கிரகத்திற்கு அருகில் 1958–ம் ஆண்டளவில் தீர்த்தக்கிணறும், தீர்த்த மண்டபமும் கட்டப்பட்டது. வருடந்தோறும் ஆனி மாதத்து சதய நட்சத்திரத்தன்று, பிள்ளையாரும் அவரது அருட் தம்பியான சுப்பிரமணியரும் இங்கு தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றனர்.

கோயிலின் உள்வீதியில் இரண்டு கிணறுகள் உள்ளது, ஒன்று மூலஸ்தானத்திற்கு அருகிலும், மற்றது சனீஸ்வரன் கோயிலுக்கு அருகிலும் உள்ளது. சனீஸ்வரன் ஆலயம் 1968–ம் ஆண்டில் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆண்டுதோறும் இங்கு நூற்றியெட்டுச் சங்குவைத்து சக்காபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

கோயிலின் மகாகும்பாபிஷேகம் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. கோயில் பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ நா. சண்முகரத்தினக் குருக்கள் கும்பாபிஷேகம் நடைபெறவில்லையே என்று வேதனை வயப்பட்டு எண்ணிக்கொண்டிருக்கையில் பிள்ளையாரே அவர் கனவில் 1968–ம் ஆண்டு தை மாதம் தோன்றி வாலஸ்தாபனத்தைச் செய்யுமாறு கட்டளை இட்டதைத் தொடர்ந்து அதே வருடம் பங்குனி மாதம் வாலஸ்தாபனமும் வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகமும் அடியார்கள் ஆதரவுடன் நடைபெற்றன.

கோயில் மூலஸ்தான பிள்ளையார் விக்கிரகம் மேற்கு நோக்கியவாறு இருக்கிறது. சிறிய தெற்கு வாசலில் உற்சவ மூர்த்திகளான பிள்ளையாருடன் வள்ளி தெய்வானை சமேதராய் சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர். கோயில் உள்வீதியில் அர்ச்சனைக் கான பூ மரங்களுடன் யாகசாலை, வாகனசாலை, மடப்பள்ளி ஆகியனவும் உள்ளன.

கோயிலின் திருப்பணி வேலைகளை அடியார்களே முன்னின்று நடத்தி வருகின்றனர். நிதி போதாது என்ற நிலை ஏற்படும் போதெல்லாம் தலங்காவலானே அடியார்கள் உள்ளத்தில் உட்புகுந்து நிதிகொடுத்து வருவதுபோல எந்தக்குறையுமின்றி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒருநாள் பூசைசெய்து நிவேத்தியம் படைப்பதற்கு அர்ச்சகரிடம் அரிசி இல்லை. அரிசி வாங்கக் கையில் பணமும் இல்லை, இந்நிலையில் என்ன செய்யலாம் என்ற சிந்தனையில், பிள்ளையாரிடமே போய் முறையிடுவோம் என அர்ச்சகர் தமது வீட்டிலிருந்து புறப்பட ஆயத்தமாகியபோது, அடியார் ஒருவர் தமது காரில் ஒருமூடை அரிசியுடன் வந்தார் இதுவல்லோ தலங்காவலான் புதுமை! இதனையெண்ணி அர்ச்சகர் இன்றும் வியந்தவண்ணம் இருக்கிறார்.

கோயிலில் ஆண்டுதோறும் திருவெம்பாவை உற்சவம், மானம்பூ உற்சவம், விநாயகர் சதுர்த்தி உற்சவம், பெருங்கதைப்படிப்பு, கயமுகாசூரசங்காரம் ஆகியன வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இராமலிங்கக் குருக்கள் பரம்பரையாக வந்த அர்ச்சகர்கள் கிட்டத்தட்டக் கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக நித்திய நைமித்திய பூசைகள் செய்து வருகின்றனர். இவர்கள் வழிவழியாக உதித்த பிரம்ம ஸ்ரீ நா. சண்முகரத்தினக் குருக்கள் இப்போது பிரதம அர்ச்சகராக இருந்து பூஜைகள் செய்து வருகின்றார். இவரது மருமகர் முறையான பிரம்மஸ்ரீ சதாசிவ யோகீஸ்வர குருக்கள் வருடாந்த உற்சவத்தின்போது கொடி, ஏற்றி திருவிழாக்களை நடாத்தி வருகின்றார்.

பண்டிதர் செ' சிவப்பிரகாசனால் ஆக்கப்பட்ட தலங்காவற் பிள்ளையார் ''திருவூஞ்சல்'' நூல், 1979 கோயில் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது.

(இக்கட்டுரை 1981–ம் ஆண்டு ஆலய தண்டிகை உற்சவத்தின்போது இலவச பிரசுரமாக வெளியிடப்பெற்றது.

# விநாயக பரத்துவம்

சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமாந்தகர் உகர மகரங்கள் தம்மால்
பகரு மொரு முதலாகி வேறுமாகி
பல வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான் இணையும் இடர் தீர்ந்தெய்தப்
போற்றுநர்க் கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின் மறக் கருணை புரிந்து ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

இந்து சமயத்தின் ஆதாரமாம் ஓங்கார தத்துவம், அந்த அருவ அருவுருவ உருவம் தான் கணபதி. அனைத்திற்கும் ஆதாரமான முழுமுதற் மூர்த்தி, விநாயக வணக்கமின்றி இடர்பட்ட சரித்திரம் உண்டு. விநாயகன் தனக்கு மேலான நாயகன் இல்லாதவன் முதல் பூஜைக்கும் தகைமை உடையவன். விக்கினங்களை போக்குபவன். இவை உபருஷத்தில் ''துமேவ பிரத்யஸம் தத்வமசி'' என்று தொடங்கி வரத மூர்த்தே நம! என்று முடிகிறது. இவற்றுள் பஞ்சகிருத்தியங்களுக்கு அதிபதி என்று இவருடைய உயர்வை குறிக்கின்றது. விநாயகரை வழிபடும் சமயம் காணுபத்தியம் எனப்படும். விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிப்படுவது பற்றி இதில் கூறப்பட்டுள்ளது. பிள்ளையார் இல்லாத கோவில் ஊர் எங்குமே கிடையாது. எல்லா ஊர்களிலும், சாலை, சந்துகளிலும், ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், ஆலமரத்தடியிலும், அரசமரத்தடியிலும், பிள்ளையார் அங்கிங்கெனுதபடி எழுந்தருளியிருப்பதை காணலாம். அத்துனை அளவுக்கு மக்களால் பெரிதும் விரும்பி தொழப்படுபவரும் எங்கும் எவருக்கும் எழுந்தருளும் இயல்பினருமாக திகழ்பவர் விநாயகர்.

பிள்ளையார் காட்சிக்கு எளியவர்; கருணைக்கு இனியவர்; தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் அருள் வழங்கும் இயல்பினர். சைவரும் வைணவரும், சாக்தரும், சமணரும், பௌத்தரும் ஆகிய பல சமயத்தவரும் பிள்ளையாரைப் போற்றுகின்றனர். ''ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை'' என்ற திருமந்திரத்தால்

விநாயகருக்கு ஐந்து கரங்களை உடையவர் என அறியப்படுகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் சம்ஹரித்தல், என்ற ஐந்தொழில்களையும் செய்கிறார். தியான ஸ்லோகத்தில் "விஸ்வோத் பத்தி ஸமஸ்திதா" சகல பிரபஞ்சங்களையுடைய சிருஷ்டி, ஸ்திதி, லயம் இம்மூன்றையும் செய்கிறார் என்பதை குறிப்பிடலாம். இதை கணபதி "உபநிஷத் த்வமேவகேவலம் கர்தாஸி, தர்தாஸி, ஹர்தாஸி" என்று குறிப்பிடுகிறது. யாதொரு உதவியும் இன்றி நீரே பலவிதமாக தோன்றும் சர்வ பிரபஞ்சத்தில் சிருஷ்டி கர்த்தாவாக இருக்கிறீர். (த்வமே கேவலம் கர்தாஸி).

பிறருடைய உதவியை எதிர் பாராமல், ஸர்வ பிரபஞ்சத்தையும் பரிபாலிக்கிறீர். (த்வமே கேவலம் தர்தாஸி) நீர் ஒருவராகவே நின்று சம்ஸ்த பிரபஞ்சங்களையும் சம்ஹாரத்தையும் செய்கிறீர். (த்வமே கேவலம் ஹர்தாஸி) சிருஷ்டி கர்த்தாவான பிரும்மாவும் ஸ்திதி கர்த்தாவான விஷ்ணுவும் ஸம்கார கர்த்தாவாக ருத்திரனும் கணபதி ஆக்ஞையில் தத்தம் காரியங்களை செய்கின்றனர். என்று ஏற்படுகிறது அப்போது கணபதி பரப் பிரும்மம் என்கிறது. ஆலயங்களை நோக்கினால் ஸ்தம்பத்தின் கீழ் மூலாதார கணபதியாகவும் துவார கணபதியாகவும் பரிவாரங்களில் முதல் நிர்தி மூலையில் விக்கினேஸ்வரராகவும் இருக்கும் விநாயகரை எந்த ஒரு செயலை தொடங்குபவரும் செயலின் தொடக்கத்தில் அவரை வழிபட்டால் அச்செயலை இடையூறு இன்றி நிறைவு செய்தும், அவரை வழிபடாமல் தொடங்கினால் அச் செயலுக்கு இடையூறு விளைவித்தும் முறையே அறக் கருணை மறக் கருணை புரிந்து வருக என்று சிவபெருமான் விநாயகப் பெருமானுக்கு வரம் அளித்தார். அதையே உலகத்திற்கு காட்டுவதற்காகதான் மறந்தது போல் விநாயகரை வழிபடாமல் திரிபுர அசுரர்கள் மீது போருக்கு செல்ல நேர்ந்த போது சிவபெருமான் ஏறிய தேர் அச்சு முறியும் படி செய்தார். சட்டம் வகுத்தவரே அச் சட்டத்திற்கு உட்பட்டு நடத்தல் வேண்டும். என்பதை உலக மக்கள் அறிந்துய்ய இங்ஙனம் செய்தார். இதனை "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடி செய்த அதி தீரர்" என அருணகிரிநாதர் தம் திருப்புகழில் அருளிச் செய்திருத்தல் காணலாம். காரணாகமத்தில் பதினாறு விநாயகரின் வடிவங்கள் போடப்பட்டுள்ளது. விநாயகப் பெருமான் லோக உபகாரமாக முப்பத்தொரு திருவடிவங்களை தாங்கினார் இதில் அறக்கருணையும் மறக்கருணையும் உண்டு.

இவருடைய பூஜையில் உணவு முக்கியமான இடம் பெறுகின்றது. அப்பமொடு அவல் பொரி என்றும் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை என்பதாலும் விநாயகருக்கு ஸத்துணவையே சமர்பிக்கிறோம். ஸத்துள்ள உணவில் கணபதிக்கு விருப்பம் என்பது கோட்பாடு. உடல் வாழ்க்கைக்கு உணவு அவசியம். முறையாக நல் லுணவை ஏற்பவர்க்கு வாழ்க்கையில் விக்கினங்கள் குறைகின்றன. மிகைபட உண்பவனுக்கும் குறைபட உண்பவனுக்கும் இடுக்கண்கள் பலநேரிடுகின்றன. அளவுடன் சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ள வேண்டும் அவ்வுணவையும் கணபதியின் பிரசாதமாக ஏற்பது அதிலும் நல்லபூஜையாகிறது. நல்லுணவை படைத்துநல்லோரை மகிழ்விப்பதுகணபதி பூஜையாகும். இதுவிக்கினங்களை அகற்றுவதில் முதல்படியாகும். இயற்கையின்போக்கில் ஒரு நியதி உள்ளது அது அந்தந்த ஏற்பாட்டின்படி இயங்கி வருகிறது. இந்த ஒழுங்கு ஏற்பாட்டில் உயர்நோக்கம் இருக்கிறது. உயர் நோக்கம் இல்லாவிட்டால் இயற்கை உயிரற்ற இயந்திரம் போலாகிவிடும்.

இது பேரறிவின் இயக்கம் சிற்றுயிர்களை பயன் படுத்தி அவைகளை பேருயிர்களாக்குவது இயற்கை தெய்வத்தின் பெரு நோக்காகும். உயிர்களின் நலம் தரும் வளர்ச்சியை தடுப்பது எதுவோ அது விக்கினம். அத்தகைய விக்கினத்தை கணபதி அகற்றுகிறார். இந்த இறைவன் செயலுக்கு ஏற்ப மனப்பான்மையை வரவழைத்துக் கொள்ளுதலே விக்னேஸ்வரர் பூஜை (எனக்கு தோல்வி ஏற்பட்டால் அதுவும் உன் திருவருளோ என்ற மனப்பான்மை) வெறும் சடங்குகள் கணபதி பூஜையாக மாட்டாது.


யான் 'எனது' என்பதை தெய்வத்திடம் ஒப்படைத்துவிட்டு வாழ்க்கையை நடத்துபவன் வாழ்க்கையில் கஷ்டங்களையும் எதிர்த்து நிற்கக்கூடியவன். சதுர்த்தி விரதம் சங்கடஹர சதுர்த்தி, குமாரசஷ்டி விரதம் அல்லது பிள்ளையார் நோன்பு வெள்ளி, செவ்வாய் அன்று வழிபாடு ஆகியவை விநாயகர் விரதங்கள். ஒரு சமயம் விநாயகர் கைலாசத்தில் நர்த்தனம் செய்திருக்கிறார். சரிந்த தொந்தி, குறுகிய கால்கள் இவரை பார்த்து சந்திரன் சிரித்தான். விநாயகர் கோபம் கொண்டு சந்திரனுக்கு சபித்து விட்டார். அன்று முதல் சந்திரனை எவருமே பார்க்க மாட்டார்கள். கண்டவரும் நிந்தை செய்து ஒதுங்குவார்கள். இதுவே விநாயகர் இட்ட சாபம்.

சந்திரன் விநாயகரிடம் மன்னிப்பு கேட்டான். விநாயகர் மனமிரங்கி சுக்ல சதுர்த்தியில் உன்னை காண்பவரெல்லாம் வீண் அபவாதம் ஏற்படட்டும். ஆனால் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் என்னைப் பூஜித்தால் அந்த அபவாதம் நீங்கப்படும் என்று சாப விமோசனம் அளித்தார். அன்று முதல் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ் விரதம் முக்கியமாக பெண்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டியது. காரணம் இந்த உலகில் பெண்களே ஆண்களை விட வீண் அபவாதத்திற்கு உள்ளாகின்றனர், ஆதலால் அவர்கள்மேல் ஏற்பட்ட வீண் அபவாதங்கள் நீங்கவும் அவர்கள் விருப்பும் பிள்ளைப் பேறு முதலிய எண்ணங்கள் சித்தி பெறவும் சித்தி விநாயகரை அவர் விரும்பிய சதுர்த்தியின்று விரதம் அனுஷ்டித்து]வழிபட வேண்டும்.ஆவணி சுக்ல சதுர்த்தியில் விரதம் பூர்த்திசெய்து விநாயகரை வழிபடுவது மூலம் பெறற்கரிய பேறுகளை பெறலாம் சுக்ல சதுர்த்தி தேவிக்கு கணேசர் சொல்கிறார் நான் உனக்கு மத்தியானத்தில் தரிசனம் கொடுத்தபடியால் சுக்கல பவுசதுர்த்தியும் மத்தியானமும் கூடிய தினத்தில் என்னைப் பூஜிப்பவர்களுக்கு அருள் செய்கிறேன். உனக்கு வரதை என்ற பெயர் விளங்கும், என்னுடன் கூடிய உன்னை யார் உபாஷிக்கவில்லையோ அவர்களுடைய மற்றைய விரதங்கள் எல்லாம் நிஷ்பலனாய் போகின்றன.

சந்த்ரோதயே த் வாயஹம்
வை ப் ராப் தஸ்தே ந சதுர்த்தகே ||
தத் காலம் மே விரதம் முன்யம்
த்வத் யுக்தம் பவது ப்ரியம் ||

கிருஷ்ண சதுர்த்தி தேவிக்கு கணேசர் சொல்கிறார் சந்திரோதயத்தில் நீ என்னை தரிசித்தால் கிருஷ்ண சதுர்த்தியும் சந்ரோதயம் கூடிய காலமும் முக்கிய விரதமாகும் ஐந்து ஜாமங்களுக்கும் அன்னம் இல்லாமல் என்ன உபாசிப்பவர்களின் கஸ்டங்கள் எல்லாம் தீர்த்து விடுவாய் உனக்கு சங்கஷ்டஹரனி என்ற பெயர் உண்டாகட்டும் கிருஷ்ண சதுர்த்தியில் வன்னி மரத்தடியில் மந்திர ஜபம் செய்வது மிகவும் விசேஷ இரவில் பூஜை செய்து விழித்திருந்து மறு நாள் காலையும் பூசிக்க வேண்டும் கணபதியை பிரும்மாதி தேவர்கள் யாவரும் வழி பட்டே தம் ஆற்றலைப் பெறுகின்றனர் மற்ற தெய்வங்களின் உபாசனை யால் அடையப்படும் பயன்கள் எல்லாம் மஹாகணபதி உபாசனையால் கிட்டுகிறது இந்த மஹாகணபதி அருளைப் பெற செய்யப் படுகின்ற மார்க்கங்களிலே ஹோமம் முக்கியமாகும் கணபதி ஹோமத்தால் அடையும் பயன்கள் அளவற்றது.

விநாயகர் பூஜைக்கு அறுகம் புல் பிரதானமானது. விநாயகப் பெருமான் அனலன் என்றஅரக்கனை விழுங்கிய போது அவன் உள்ளே சென்று பதினான்கு உலகங்களையும் தகித்தான். சமனமாக கணபதி அறுகம் புல்லை தரித்தார் என்பது புராணக் கூற்று. சாந்தி கரமான ஹோமங்களில் அறுகம் புல் ஹோமம் செய்யப்படுகின்றது. விநாயகருடைய வாகனம் பெருச்சாளி, கஜமுகாசுரன் சிவபெருமான் கொடுத்த வரத்தினால் இறந்தவன் போன்று பழைய வடிவை விட்டு பெருச்சாளி வடிவங் கொண்டு விநாயகப் பெருமானை தாக்குவதற்காக வந்தான் விநாயகர் அவனை அடக்கி பெருச்சாளியாக தனது வாகனமாக கொண்டார். எனவே விநாயகரை பணிந்தேத்தி நலம் பெறுவோமாக.



வருடாந்த ரதோற்சவத்தின்போது சுவாமி தேரேறி
வீதிவலம் வரும் காட்சி



ஆலய பிரதம குருக்கள்
சிவஸ்ரீ. நா. சண்முகரத்தினக்குருக்கள்

# தலங்காவலான் அற்புத விநாயகன்

சிவஸ்ரீ. நா. சண்முகரத்தினக் குருக்கள்

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேசலம் முதலிய சிவத் தலங்களைத் தன்னகத்தே கொண்ட பெருமையுடையதாகிய இலங்காபுரியின் வடபாலாக அமையப் பெற்றதும் தமிழ் மன்னர்கள் இலங்கையை அரசு செய்த காலத்தில், தென்னிந்தியாவிலிருந்து வந்த அந்தகரொருவர் அரசவையில் யாழ் வாசித்து பரிசாகப் பெற்ற பெருமையை யுடையதுமான யாழ்ப்பாணக் குடாநாட்டில் சகல சிறப்புக்களையுடையதும், சிறந்த கல்விமான்கள், புலவர்கள், ஞானப்பிரகாச முனிவர் முதலிய மிகச் சிறப்புடைய பெரியோர்களைத் தன்னகத்தே கொண்ட பெருமை பெற்றதுமான திருநெல்வேலியெனுமூரில் தம்மை மெய்யன்புடன் வந்து வணங்கும் அடியார்களின் இடர் போக்கி நற்கருணை பாலிக்கும் தெய்வமாகிய தலங்காவற் பிள்ளையார் அமர்ந்திருக்கின்றார்.

அவருக்குத் திருநாமங்கள், இன்னுமிரண்டு அறியக்கூடியதாக இருக்கின்றது. ஒன்று இந்தப் பெருமானுக்கு, 1840 -ம் ஆண்டில் ஊரிலுள்ள சில அடியவர்களால் தருமசாதனமாகக் கொடுக்கப்பெற்ற சாணியுறுதியில், 'ஸ்ரீ காயாரோகண மூத்தநயினர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவதாக இந்தப் பெருமான் எழுந்தருளிய ஆலயத்தில் கிழக்குப் பக்கமாக ஒரு பழமையான அனிஞ்சில் மரம் இருந்ததாகவும் அதனல் பெருமானை அனிஞ்சிலடிப்பிள்ளையாரெனக் கூறப்பட்டதாகவும் ஒரு வயது சென்ற முதியவர் எனக்குச் சொன்னர்.

அந்தக் காலத்தில் கோயில் செங்கற்களினல் கட்டப்பட்டு இருந்தது. பின்னர் நமது பெரிய தந்தையார் ஞானசேகரக்குருக்கள் வைத்தீஸ்வரக்குருக்களின் காலத்தில் (நான் கல்வி கற்கும் காலம்) 1918-ம் ஆண்டு பங்குனி மாதம் ஒரு ஊரிலுள்ள மகாஞலும் கல்லினல், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபமாகிய மூன்றும் கட்டிமுடிக்கப்பெற்று ஊரிலுள்ள அடியார்களது உதவியோடு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பெரிய தந்தையாருக்குப்பின் நான் 1929 -ம் ஆண்டு முதல் பெருமானுடைய தொண்டைச் செய்துவருகிறேன். எனது காலத்தில் நான் அறிந்த அவருடைய திருவருள் செயல்கள் அளவிடற்கரியது. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது காலத்தின் முன் இங்கு கொடியேற்றி உற்சவம் செய்வதற்கு ஒருவித தளபாடங்களோ, அடுக்குகளோ இருக்கவில்லை. ஊரிலுள்ள ஒரு அடியாருடைய வீட்டில் செப்புத்தகடுகள் இருந்தது. அந்தப் பெரியவர் காலமாகிய பின் சந்ததி இல்லாமையினால் அவரது உறவினர்கள் தங்களுக்குள் சமாதானமாக எல்லாப் பொருள்களையும் பகிர்ந்து எடுத்துக்கொண்டனர். செப்புத்தகட்டை ஒருவரும் எடுக்கவில்லை. அன்றிரவு அவர்கள் நித்திரையாகவிருக்கும் சமயம் பெருமான் அவர்களெல்லோரதும் கனவில் தோன்றி காலம்சென்ற பெரியவரது பெயரைச் சொல்லி அவருடைய பொருட்களில் எனக்கு பங்கு இல்லையா என்று கேட்டார். உங்களுக்கு என்ன வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது கொடிஸ்பத்திற்குச் செப்புத்தகட்டைத் தாருங்கள் எனக் கூறினர். மறுநாள் அதிகாலை அவர்கள் எல்லோரும் என்னிடம்வந்து பிள்ளையாருடைய கருணையை வியந்து கூறி அந்தத் தகட்டை எடுத்துக் கோயிலுக்கு கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டார்கள். அதை உடனேபோய் ஏற்றிக்கொண்டுவந்து கோயிலில் வைத்துவிட்டு ஊரவர்களின் பொருளுதவியுடன் கொடிஸ்தம்பம் செய்து 1934-ம் ஆண்டு ஆனி மாதத்தில் கொடிஸ்தம்பம் நாட்டப்பட்டது.

அந்தக்காலத்தில் ஓர்நாள் பூசை செய்வதற்கு திருவமுதுக்கு அரிசி இல்லாததால் மனம் வருந்திப் பெருமானை நினைத்து அப்பனே! நீ அரிசியும் தரவில்லை, கையில் காசும் தரவில்லை. உன்னுடைய பூசையை எவ்வாறு நான் செய்யப்போகிறேன் என்று சொல்லும் சமயம், நல்லூரிலுள்ள சின்னப்பாப்பிள்ளை இராமநாதன் என்பவர் தனது காரில் சுத்தம் செய்த 3 புசல் பச்சரிசி சாக்கில்போட்டு எனது வீட்டிற்கு அனுப்பிவைத்தார். பூசை குறைவின்றி நடந்தது.

ஊரிலுள்ள ஒரு பெரியாருடைய வீட்டில் சபிண்டிகரணம் நடைபெற்றது. அதில் சொல்லப்பட்ட முறைப்படி மிகவும் தாராளமாக எல்லாம் தந்தார்கள். அப்போ என்னுடைய மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. பெருமானை நினைத்து இந்த அரிசி காய்கறி வேட்டி சால்வை இவையெல்லாம் எத்தனை நாட்களுக்கு இதில் உனக்குப் பிரயோசனப்படக்கூடிய பொருள் ஒன்றுமில்லையே என நினைத்துக்கொண்டு எழுந்தேன் உடனே கிரியை செய்தவர் சற்று நிற்கும்படி சொல்லி வீட்டினுள்போனர் திரும்பி வரும்போது கையில் மிகவும் நன்ருக உள்ள ஒரு செம்புடன் வந்து அதை என்னிடம் தந்து பிள்ளையாருக்குக் கொண்டுபோய் வையுங்கள் எனச் சொன்னர். எம்பெருமானுடைய திருவிளையாடலை நினைந்து மனம் பூரித்தேன்.

1942-ம் ஆண்டு ஆனி மாதம் பிள்ளையாருடைய தேர்த்திருப்பணி நிறைவெய்தி வெள்ளோட்டவிழா முடிந்ததும் கோயில் வாசலிலுள்ள உவர் நீருடைய கிணறு நன்னீராக மாறியதை எல்லோரும் அறிவர். கால்மைல் சுற்றுடலில் உள்ளோர் தங்களுடைய பாவிப்புக்காக இன்றும் இந்தக் கிணற்றிலேயே நீர் எடுத்துச் செல்வதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாலயத்தில் 1918-ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேகத்தின் பின், 1948-ம் ஆண்டு பங்குனி மாதம் சில திருத்தங்கள் செய்து சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதன் பின்னர் இருபது வருஷம் கழித்து, பிள்ளையாருக்குச் சாத்திய அஷ்டபந்தன மருந்து பழுதுற்றதனல் சம்புரோக்ஷணே செய்ய வேண்டுமென நினைத்து ஒரு அடியவரிடம் சொன்னபோது ஏளனமான முறையில் கதைத்தார். எனக்கு அவருடைய நினைவு விளங்கிவிட்டது. மனவேதனை தாங்காமல் நேராக மூலஸ்தானம் சுவாமி சந்நிதியில் போய் "அப்பனே! இவ்வளவு காலமும் உனக்குப் பூசை செய்துவருகிறேன் என்னிடம் பொருள் இல்லையென்பதால்தானே அவர் இவ்வாறு சொன்னர். நீ பொருள் உள்ளவர்களிடம் சொல்லி உனது கும்பாபிஷேகத்தை நடத்து" என முறையிட்டுத் திரும்பினேன். சில நாட்கள் சென்றன. அதன்பின் ஒருநாள் இரவு எமபெருமான் கனவில் தோன்றி இரண்டே வார்த்தைகள் கூறி அருளினர். அதாவது பங்குனி மாதம் வாலஸ்தாபனம் செய்து வைகாசி 29-ம் திகதி வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் செய்யலாம்.

அவர் கூறியவாறு யாரும் எதிர்பாராத வகையில் பங்குனி மாதம் வாலஸ்தாபனம் நடந்தது. சித்திரை மாதம் முழுவதும் திருநெல்வேலி காயாரோகண சுவாமி கோயில் கொடியேற்றத்துடன் முடிந்தது. வைகாசி மாதம் 7–ம் திகதி பூங்காவன உற்சவம் முடிந்து வீடு வந்தேன். எனது வீட்டிலுள்ளவர்கள் நல்லூரிலுள்ள ஒரு அம்மையார் என்னை வந்து விசாரித்ததாகச் சொன்னார்கள். நான் உடனே அவர் வீட்டிற்குச் சென்றேன். என்னை உட்கார வைத்து, தான் சொப்பனம் கண்டதாகவும் பிள்ளையாருடைய திருப்பணியை நடத்திக் கும்பாபிஷேகத்தையும் செய்து அடுத்த சில நாட்களில் வரும் கொடியேற்ற மஹோற்சவத்தையும் தவறவிடாது செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்கள். நான் சந்தோஷத்துடன் திரும்பிவந்து அடுத்த நாளே திருப்பணி வேலைகளை ஆரம்பித்துப் பரிவார மூர்த்தியாக ஒரு சனீஸ்வரப் பெருமானுக்கும் ஒரு சந்நிதானம் அமைத்து திருவருள் துணையினால் திருப்பணி வேலைகள் செய்து 1968 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி பிள்ளையாருடைய ஆஞ்ஞைப்படி மூன்றும் முறையாக முன்னரிலும்பார்க்க மிகவும் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தேர்த் திருப்பணி நடைபெற்று முடிந்தவுடன் எஞ்சியிருந்த கழிவு மரங்கள் விறகுகளைக் கொண்டு பிள்ளையாருடைய கட்டிட வேலைகளுக்காக ஒரு சுண்ணாம்புச்சூளை வைக்கப்பட்டது. காலம் கோடைகாலம். சூளை வைத்தவர்கள் இன்று இரவு ஒரு மழை பெய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். அப்போ பிள்ளையாருக்கு நல்லமாதிரி ஒரு அபிஷேகம் செய்தோம். அடியார்கள் கூட்டமாக வந்தனர். அந்தக் கூட்டத்தில் மிகவும் பிரபல்யமுடைய ஒரு சோதிடர் கூடிநின்றவர்களிடம் என்ன விசேஷம் நடக்கிறதென வினவினார். அவர்கள் மழையை வேண்டி பிள்ளையாருக்கு அபிஷேகம் நடக்கிறது என்றார்கள். சோதிடர் கிரகங்களின் நிலையைக் கூறி ஒரு போதும் இன்று மழை பெய்யாது. பிள்ளையாருடைய நற்கருணைக்கும் பங்கமேற்படும் என்றார். அது எல்லாவற்றையும் நாளைக்குப் பேசிக்கொள்வோம் என்று கூறி எல்லோரும் வீடு சென்றார்கள். எல்லோரும் ஆச்சரியப்படுமாறு அவர்கள் சென்று ஒரு மணித்தியாலத்திற்குள் பிள்ளையாருடைய சுற்றாடலில் மாத்திரம் பெருமழை பெய்தது. பெருமானுடைய கருணையை எல்லோரும் குறிப்பாகச் சோதிடரும் வியந்து பாராட்டிப் பேசிக் கொண்டார்கள்.

சென்ற காலங்களில் நடந்த சில அசம்பாவிதங்கள் காரணமாக பல அடியார்களின் தாராளமான பொருளுதவியினாலும் அவர்கள் ஒத்துழைப்பினாலும் 1988 ஆம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாகப் பெருமானது திருவருள் துணையினால் கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது. இந்தக் கும்பாபிஷேகத்துடன் எனது காலத்தில் எனக்குத் தெரியக்கூடியதாக நான்காவது கும்பாபிஷேகமாகும்.

நான் என்னுடைய இளமைக் காலத்தில் மிகவும் குளப்படிகாரனாக இருந்தேன். வண்டியில் பூட்டிய எருது தான் விரும்பியவாறு செல்லவிடாது சாரதி தான் போக வேண்டிய இடம்நோக்கிச் செலுத்திச் செல்வதுபோல் என்னையும் எனது மனம்போன போக்கில் செல்லவிடாது சாரதியாகிய எம்பிரானார் தடுத்தாட்கொண்டு எனது காலத்தில் நடக்க வேண்டிய திருத்தொண்டுகளையும் திருப்பணி வேலைகளையும் செய்வித்தார். நடந்தவை – மேற்கொண்டு நடக்க இருப்பவை எல்லாம் விநாயகப் பெருமானது திருவருட் செயலே என்ற மனநிறைவுடன் அவருடைய திருவடிகளுக்கு எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

அத்துடன் எனது அபிமானத் தந்தையாரும், எனது கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு இரவு பகலாக உழைத்தவரும் எனது ஞான குருவுமாகிய திருநெல்வேலிச் சிவன் கோயில் சிவஸ்ரீ சி. சபாபதி சிவாசாரியருடைய பாதகமலங்களுக்கும் நமஸ்காரம் செலுத்தி பொறுமையுடன் வாசித்த பெரியோர்க்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

எல்லா அடியார்களும் விநாயகப் பெருமானின் திருவருளினால் சகல செல்வங்களையும் தீர்க்காயுளையும் பெற்று நீடூழி காலம் வாழ்வார்களாக!

# பிணி தீர்க்கும் பிள்ளையார்

சதா யோகீஸ்வரக் குருக்கள்
*(ராசாத்திக் குருக்கள்)*

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் விநாயகப் பெருமான் மீது பக்தியும் நம்பிக்கையும் உள்ள அடியார்கள் மனம் உவந்து கொடுத்த பேருதவி நிதியாலும், சொல் வன்மையும் நேர்மையும் ஒழுக்கமும் நிதானமும் நிறைந்த ஆசாரசீலராகவுள்ள குருக்கள் ஐயாவின் தூண்டுகோளாலும் விபவ வருஷம் ஆனி மாதம் 17–6–88 வெள்ளிக்கிழமை அதிகாலை நயினை நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பிரதிஷ்டா குரு ஸ்வாமி நாத பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற திருவருள் கூடியது.

தலங்காவல் பிள்ளையார் தன்னுடைய பெயரின் உண்மையை அண்மையில் நடைபெற்ற வன்முறை அசம்பாவிதங்களின் போது தன்னடியவரையும் சுற்றுடலையும் காப்பாற்றி நிரூபித்து விட்டார். என்பதை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது. நாம் கஷ்டம் வரும்போது'தான் கடவுளிடம் போய் முறையிடுவோம். பிறகு மறந்து விடுவோம். அப்படி மறந்தவர்களைக் கூட விக்கினம் தீர்த்து அருளியிருக்கிறார்.

என்றும் நம்பிக்கையுடன் வாழ்பவருக்கு இறை அருள் தானகவே கை கூடும். கருணைக்கடவுளாம் கணபதிக்கு வாய்த்த குருக்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு உடல் நலம் குன்றி ஆனைப்பந்தி வைத்தியசாலையில் இருந்தபோது, ''பிள்ளையாரின் தெற்குப்பக்கக் கொட்டகை வேலைகள் குறையாக உள்ளது. அதை நான் சுகமாகி நிறைவேற்ற மாட்டேன்'' என்று மிகவும் மனம் வருந்திஞர்.

எனக்கு ஒரு மருந்தும் வேண்டாம் என்னை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோங்கள். என்னுடைய உயிர் வீட்டில்தான் பிரிய வேண்டும் என்று அடம்பிடித்து வீட்டிற்கு வந்தார் வந்தவுடன் பிள்ளையாரின் விபூதியை உடம்பு முழுவதும் பூசி நாளைக்கு என்னுடைய மரணக் கொண்டாட்டம் என்று சொல்லியபடியே கோவிலைப் பார்த்தார். அருகில் இருக்கும் எனக்கும் பிள்ளையாரின் மீது கோபந்தான் வந்தது. பின்பு மனத்தை ஒருவாறு தேர்த்திக் கொண்டு பிள்ளையாரே உண்மை விசுவாசத்தோடு உனக்குத் தொண்டு செய்தது எல்லாம் உண்மையானுல் மாமாவிற்கு இப்ப ஒன்றும் செய்யக்

கூடாது என்று கூறி மனம் வருந்தினேன். மறுநாள் காலை இவரின் உடல் நலம் சிறிது சிறிதாக ஆரோக்கியமாக வந்தது. அயலவர்கள் எல்லாரும் பிள்ளையார் கோவில் ஐயா தப்பிவிட்டார். திருப்பணி வேலைகள் செய்ய வேண்டும் என்று சந்தோஷப் பட்டார்கள். அப்படியே நாளுக்கு நாள் குருக்கள் நலமடைந்து கொட்டகை திருப்பணியும் இன்னும் பலதிருத்த வேலைகளையும் செய்வித்து கும்பாபிஷேகத்தையும் இவரே அடியவர் களிடம் சென்று நிதி சேர்த்து முடித்தார் என கடன் பணி செய்து கிடப்பதே என்று இன்றும் பிள்ளையாருக்கு தன்னால் இயன்ற தொண்டுகளைச் செய்து வருகிறார்.

குரு அருளும் திருவருளும் ஒருமனப்பட்டால் இறைஅருள் தானாகவே கிட்டும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடை பெறும் இக் காலங்களில் சித்திரத்தேர் திருப்பணி செய்வித்த அமரர் டாக்குத்தர் சுப்பிரமணியம் அவர்கள் கண் முன் தெரிகிறார். அமரர் ஆகிவிட்ட போதும் அவர் இங்கு பிள்ளையாருக்கு செய்த தொண்டுகள் எல்லாம் மறக்கமுடியாதவைகளாகும்.

உற்சவ காலங்களில் குறித்த நேரத்தில் பூஜைகள் திருவிழாக்கள் எல்லாம் நடை பெற எங்களுக்கு அறிவுரை வழங்கியவர். விரதகாரர் நன்மை கருதி தெய்வகாரியத்தை ஒருவருக்காக காத்து இருக்கக் கூடாது ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும் என்று அடித்துக் கூறுபவர். இப்படியானவர்கள் எல்லாம் தெய்வப்பிறவிகளாகவே இறைவனடி சேர்வார் கள் என்பது உண்மை.

இப்போதும் மஹோற்சவ காலங்களில் நேரம் தவறாது நடக்க சரியை வழிபாடு செய்து வரும் ஐங்கர நேசரும், சற்குணவான்களும் திருச்செல்வர்களாகிய இளைஞர்கள் பிள்ளையாரின் திருத்தொண்டுகளைச் செய்து வருவது போற்றத்தக்கது.

எம் முன்னோர் காட்டிய வழிப்படி திருத்தொண்டுகளைச் செய்து பிள்ளையாருடைய கும்பாபிஷேகத்தில் விமானஸ்தூபி வேலை செய்த தம்பு ஞானசேகரம், வர்ண வேலைகளைச் செய்த சி. கனகராசா குழுவினரும் மற்றும் நாதஞ்சலி செய்து வரும் கண்ணுச்சாமியின் பிள்ளைகளாகிய தில்லைநாதன், பெருமாள், மற்றும் தொண்டுகள் செய்தவர்கள் எல்லாரும் சகல செல்வங்களும் பெற்று நோயற்ற வாழ்வு வாழ ஆசீர்வதிக்கிறேன்.

## பிள்ளையார் சுழி

பிரணவத்தின் சொரூபமானவன் விநாயகன் என்பதைத் துதிக்கை வெளிப்படுத்துகின்றது. நாதம், விந்து, அகரம், உகரம், மகரமாகிய ஐந்து உறுப்புக்களையும் கொண்டது பிரணவம். முதலாவதான நாதம் தண்ட வடிவமானது அடுத்த விந்து, விட்ட வடிவமானது. இவ்விரு உறுப்புகளும் சேர்ந்தே பிள்ளையார் சுழி (உ). இது நாதவிந்துக்களின் வடிவமாகும். விநாயகனின் துதிக்கையே நாதவிந்து வடிவம். மற்றைய எழுத்துக்கள் விநாயகனின் முகத்திலடங்கும். இதனாலேயே எதைத் தொடங்கும் போதும் விநாயகரையே முதலில் வணங்குவதுடன் எதனை யும் எழுதத்தொடங்கும் போதும் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப் பதும் மரபாகி விட்டது. 'கணபதி பூசை கைமேற் பலன்' என இது அழைக்கப்படலாயிற்று.

# திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார்

## [ஸ்ரீ காயா ரோகண முத்த நயினார்]

# திருவூஞ்சல்

### காப்பு

(ஆசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

சீராரும் யாழ்ப்பாணத் திருநெல்வே லிப்பதியில்
சிறப்புடனே கோயில் கொள்ளுந் திகழைந்து கரத்தாராம்
பேராருந் தலங்காவற் பிள்ளையார் தாமாடப்
பெருமைபெறு திருவூஞ்சற் பாமாலை யான்பாடக்
காராருங் கற்பகம்போற் கருதடியார் தமைக்காத்துக்
காயாரோ கணராகிக் காசினிமே லருள்சுரக்கும்
பாராரும் போற்றுநல வல்லமைசேர் பாகத்துப்
பாசாங் குசத்தாராங் கணபதிதாள் காப்பாமே.

## திருவூஞ்சல்

சீராரும் நான்மறைகள் கால்க ளாகச்
செப்பரிய ஆகமங்கள் விட்ட மாகப்
பேராருங் கலைபலவுங் கயிற தாகப்
பெருமைபெறு பிரணவமே பலகை யாகச்
சேராரும் மந்திரங்கம் பலம தாகச்
செம்மையு டனமைந்த திருவூஞ்சல் தனின்மேவிப்
பாராரும் போற்றுதலங் காவல் கொள்ளும்
பகர்முத்த நயினரே! ஆடி ரூஞ்சல்! (1)

பூதகணம் புடைநின்று போற்றி செய்யப்
புண்ணியநல் லடியார்கள் வடந்தொட் டாட்ட
வேதஇசை அந்தணர்கள் விரும்பி ஓத
விண்ணவரும் மண்ணவரும் வணங்கி ஏத்தக்
காதல்மிகு மடியார்கள் கசிந்து பாடக்
காயாரோ கணராகக் கருது கின்ற
ஓதுபுகழ்த் தலங்காவற் பிள்ளை யாராம்
உயர்மூத்த நயினரே ! ஆடீ ருஞ்சல் ! (2)

சந்திரனுஞ் சூரியனுங் குடைகள் தாங்கத்
தக்கநல வாயுதேவர் கவரி வீசச்
சுந்தரமார் வருணனு லவட்ட மேந்தத்
தோத்திரங்கள் ஓதுவார் ஓதி ஏத்தக்
கந்தமலர்ப் பொழில்சூழ்நெல் வேலி வாழும்
காயாரோ கணராகக் காட்சி நல்கும்
நந்தமது தலங்காவற் பிள்ளை யாராய்
நவில்மூத்த நயினரே ! ஆடீ ருஞ்சல் ! (3)

உலகமெலாம் படைக்கின்ற பிரமன் தானும்
உலகமவை காக்கின்ற திருமால் தானும்
அலகில்பல தேவர்கட்கு அதிபன் தானும்
அளவில்லா நிதிபதியாம் அவனுங் கூடிப்
பலபலவாம் புகழ்பாடி வடந்தொட் டாட்டப்
பகர்காயா ரோகணராம் பகவா னுகித்
தலங்காவற் பிள்ளையா ராய்மன்னு மெங்கள்
தகுமூத்த நயினரே ! ஆடீ ருஞ்சல் ! (4)

மாதுமையாம் பார்ப்பதியை மணந்த ஞான்று
மன்னுவட திசைதாழத் தென்பா லோங்க
ஏதுமறி யாதவர்கள் இரங்கி ஏங்க
ஈசனவர்க் கருள் சுரக்க எண்ணி அன்று
ஓதுதவ அகத்தியரைத் தென்பா லேவ
உறுமவரின் கமண்டலநீர் கவிழ்த்து வீழ்த்தி
தீதுபல நீக்கியருள் காயாரோ கணராகும்
திருமூத்த நயினரே ! ஆடீ ருஞ்சல் ! (5)

காசினியோர்க் கிடர்புரிந்த கயமுகனே டன்று
கருதுமமர் புரிந்தவனைக் காதி வீழ்த்தத்
தேசுதிகழ் ஆகுவென அவனும் மேவச்
செப்பரிய வாகனமாய் அதனை ஊர்ந்து
பேசினிய அருள்சுரந்த பிள்ளை யாராய்ப்
பிறக்குங்கா யாரோ கணரு மாகி
மாசிலாத் தலங்காவல் மகிழ்ந்து செய்து !
மகிழ்மூத்த நயினரே ! ஆடீ ருஞ்சல் ! (6)

திருமாலும் பிரமனுமே சேர்ந்து நின்று
செய்தொழில்கள் மேம்படநல் லருள்பெற் றுய்ய
வருதேவர் கோனுக்கும் வரங்க ளீந்து
மன்னுநல விநாயகராய் வாழு மெங்கள்
திருநெல்வே லிபுரக்குந் தேவ தேவே !
செப்புங் காயாரோ கணரு மாகி
வருமெங்கள் தலங்காவற் பிள்ளை யாரே !
வளர்மூத்த நயினாரே ! ஆடீ ரூஞ்சல் ! (7)

அருள் பொழியுந் திருவதன மசைந்து தோன்ற
ஐந்துதிருக் கரங்களுமே அசைந்து தோன்ற
மருவினிய பூணூலு மசைந்து தோன்ற
மற்றுள்ள ஆபரண மசைந்து தோன்றக்
கருதரிய கழலிணைக ளசைந்து தோன்றக்
காயாரோ கணராகி வாழு மெங்கள்
தருநிலவு தலங்காவற் பிள்ளை யாராம்
தவமூத்த நயினாரே ! ஆடீ ரூஞ்சல் ! (8)

திருநாகைக் காரோணத் தெந்தை தந்த
திருவல்ல பைபாகா ஆடீ ரூஞ்சல் !
வருகோயிற் பணிபலவுங் கனவிற் காட்டி
வாகுடனே முற்றுவிப்பீர் ! ஆடீ ரூஞ்சல் !
குருவென்வே எழுந்தருள்வீர் ! ஆடீ ரூஞ்சல் !
குஞ்சரநன் முகத்தோரே ! ஆடீ ரூஞ்சல் !
அருள்காயா ரோகணரே ! ஆடீ ரூஞ்சல் !
அருள்மூத்த நயினாரே ! ஆடீ ரூஞ்சல் ! (9)

ஏரம்ப மூர்த்தியாரே ! ஆடீ ரூஞ்சல் !
எங்கள்குலக் காவலரே ! ஆடீ ரூஞ்சல் !
சேர்பாசாங் குசத்தாரே ! ஆடீ ரூஞ்சல் !
செங்கண்மால் மருகோனே ! ஆடீ ரூஞ்சல்
பார்புரக்கும் நாயகரே ! ஆடீ ரூஞ்சல் !
பகர்சித்தி புத்திபாகா ! ஆடீ ரூஞ்சல் !
சீர்காயா ரோகணரே ! ஆடீ ரூஞ்சல் !
திகழ்மூத்த நயினாரே ! ஆடீ ரூஞ்சல் ! (10)

## வாழி

உலகுபுகழ் வேதகலை உயர்ந்து வாழி !
ஓதுறுமா கமங்களவை உயர்ந்து வாழி !
அலகில்புக ழந்தணரான் பூதி வாழி !
ஐந்தெழுத்து மடியாரும் ஓங்கி வாழி !
பலநலஞ்சேர் முகில்வாழி ! பாரோர் வாழி !
பல்குமர சதுவாழி ! செங்கோல் வாழி !
தலங்காவற் பிள்ளையார் தாள்கள் வாழி !
தவமூத்த நயினார்தாள் வாழி ! வாழி ! (11)

## எச்சரிக்கை

திருவார் பிரணவ ரூபவி நாயகா ! எச்சரிக்கை !
மருவார் துளவனி மான்மரு கோனவன் எச்சரிக்கை !
வருவார் வினைகெட வாழரு ளீகுவன் எச்சரிக்கை !
மூருகார் தலங்காவல் மூத்த நயினாரே ! எச்சரிக்கை!

## பராக்கு

ஐங்கரக் கடவுளாம் அண்ணல் பராக்கு !
ஆதிமூத லாகிய ஐயன் . பராக்கு !
திங்களணி வேணியர் செல்வன் பராக்கு !
திகழுபூ தாகாரச் செல்வன் பராக்கு !
தங்குமருள் தந்திடுந் தலைவன் பராக்கு !
தலங்காவல் கொள்கின்ற தலைவன் பராக்கு !
மங்கள காயாரோ கணரே ! பராக்கு !
மருவுநன் மூத்த நயினார் பராக்கு !

## லாலி

ஓங்காரக் கணபதியே ! லாலி ! சுபலாலி !
உமைசிவனின் பாலகனே ! லாலி ! சுபலாலி !
ஆங்காரந் தீர்ப்பவனே ! லாலி ! சுபலாலி !
அங்குசபா சமுடையாய் ! லாலி ! சுபலாலி !
நீங்காத ஏரம்பா ! லாலி ! சுபலாலி !
நினைகாயா ரோகணரே ! லாலி ! சுபலாலி !
பாங்கார்தலங் காவலனே ! லாலி ! சுபலாலி !
பகர்மூத்த நயினாரே ! லாலி ! சுபலாலி !

## மங்களம்

திருவாரும் பிள்ளையார்க்கு ஜெய மங்களம் ! –சிவ
பெருமாற்கும் தேவியர்க்கும் சுப மங்களம் !
தேவர்சிறை மீட்டுக்காத்த செய்யதிரு முருகனுக்கும்
பூவலயம் காக்கின்ற புகலுநல்ல வைரவர்க்கும்
பாவமவை போக்குகின்ற பத்திரைதன் கேள்வனுக்கும்
தேவாதி தேவர்யார்க்கும் தெய்வங்கள் யாவருக்கும்
மங்களம் ! ஜெயமங்களம் ! மங்களம் ! சுபமங்களம் !
மங்களம் ! மங்களம் !! மங்களம் !!!

திருச்சிற்றம்பலம்.

(பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்களால்
1979-ம் ஆண்டு இயற்றப்பெற்றது)

# எல்லாம் அவன் செயல்

அவனன்றி ஓரணுவும் அசையாது.

எம்பெருமான் தலங்காவலானின் கும்பாபிஷேக ஏற்பாடுகள் பற்றி குருக்கள் ஐயாவுடன் அவரது இல்லத்திலிருந்து அளவளாவிக் கொண்டிருந்தபோது, கும்பாபிஷேக மலர் வெளியிட வேண்டுமென்று அவரது மனத்துக்குள்ளிருந்த ஆதங்கத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. அங்குகூடவிருந்த குருக்கள் ஐயாவின் மருமகன்மார், அதனை ஆமோதிப்பதுபோன்று, கும்பாபிஷேக மலர் ஆசையினை வெளிப்படுத்தினர்.

கும்பாபிஷேக மலரை வெளியிடலாமென்ற ஆசை என்மனதிலும் துளிர்த்தது, காலநிலை சரியில்லாத போதிலும், எம்மால் முடிந்தவரை செய்யலாமென்று முனைந்தோம்.

குருக்கள் ஐயாவின் ஆசியுடன் மலர் தயாரிப்பில் இறங்கினோம். அறிஞர்கள் எதுவித மறுப்புமின்றி கட்டுரைகளைத் தந்துதவினர். ஆனாலும் காலம் குறுகியதாக அமைந்ததால், விரும்பியவாறு, மேலும் பல கட்டுரைகளைச் சேர்த்து, இதனை மேலும் அழகுற வெளியிட முடியாது போய்விட்டது.

ஆசியுரைகள், கட்டுரைகள் தந்துதவிய பெருமக்களுக்கு எமது நன்றிகள்.

கும்பாபிஷேக புகைப்படங்களைத் தந்துதவிய குருக்கள் ஐயாவின் பேரனார் அவர்களுக்கும், மலரின் அட்டைப்பட கோயில் முகப்புப் படத்தை எடுத்துதவிய சித்ராலயா அதிபர் திரு. கே. பாலசிங்கம் அவர்கட்கும், சகல புளக்குகளையும் துரிதமாகச் செய்து உதவிய சித்ராலயா ஊழியர்களுக்கும், புளக்குகளுக்கான செலவுகளைத் தம் பங்காக ஏற்றுக்கொண்ட 'நியூற்ரேன்' அழகரத்தினம் அவர்களுக்கும் நன்றிகள் என்றுமுண்டு.

அட்டைப்படத்தினை வரைந்து தந்தவர் முரசொலி ஓவியர் லங்கா; மலரை விரைவாக அச்சிட்டுத் தந்தவர்கள் முரசொலி அச்சக ஊழியர்கள்; இதில் பெரும் பங்கு வகித்தவர் முரசொலி வேலைப்பகுதி முகாமையாளர் திரு. க. மயில்வாகனம் அவர்கள். இவர்களுக்கு தலங்காவலான் கிருபை என்றும் கிடைக்கும்.

சிறந்த சமய பக்தரும், சமூகத் தொண்டருமான முரசொலி ஆளுநர் நாயகம் திரு. ம. சிவராசா அவர்கள் வழங்கிய ஆதரவும், பெரும் உதவியும் கும்பாபிஷேக மலரை அழகுறக் கொணரச் செய்தது.

உள்ளும், புறமும் நின்று இம்மலரை வெளியிட உதவிய பெருமக்கள் அனைவருக்கும் எம் நன்றிகள்.

எல்லாம் அவன் செயல்.

**எஸ். திருச்செல்வம்**
தொகுப்பாசிரியர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
[illegible]
பதிவு இல. 93
19. 5. 1950
[illegible]
[illegible] 12005
[illegible] 1968